வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 14.12.2023 வியாழக்கிழமை | இதழ் : 346 | பக்கங்கள் : 12

# நிறைவேறியது 2024 ‘பட்ஜெட்’

கொழும்பு, டிசெம்பர் 14

2024ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவு திட்டம் 41 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்று புதன்கிழமை நடைபெற்றது. குழுநிலை விவாதங்களைத் தொடர்ந்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில், வரவு - செலவு திட்டத்தின் மூன்றாம் வாசிப்புக்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 81 வாக்குகளும் கிடைத்தன.

ஆதரவாக அரசாங்க தரப்பான பொதுஜன பெரமுன வாக்களித்தது. ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி (ஜே. வி. பி.) ஆகியன எதிராக வாக்களித்தன.

தமிழ் மக்கள் கூட்டணி, தமிழரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இதேநேரம், பாராளுமன்ற அமர்வில் பங்கேற்க ஒரு 11

## மருமகனின் தாக்குதலில் மாமனார் உயிரிழந்தார்!

வடமராட்சி, டிசெ. 14

மருமகன் தாக்கியதில் மாமன் உயிரிழந்த சம்பவம் வடமராட்சியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

கரவெட்டி - வதிரி பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நேசராசா அன்ரன் (வயது 50) என்பவரே 11

## இலங்கைக்கு 2ஆவது தவணை கடன் வழங்க ஐ.எம்.எவ். அனுமதி!

கொழும்பு, டிசெ. 14

இலங்கைக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதியின் இரண்டாம் தவணை கொடுப்பனவுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையுடன் இணக்கம் காணப்பட்டுள்ள 48 மாதங்களுக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதியின் முத லாவது மீளாய்வு, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையில் நேற்று முன்தினம் 11

## பெண் மரணம் உடல்கூறு மாதிரி கொழும்புக்கு

கொழும்பு, டிசெ. 14

திருமணமாகி ஒரு வருடமேயான இளம் குடும்பப் பெண் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

உடுவில் - கற்பகப் பிள்ளையார் கோவிலடியை சேர்ந்த சண்முகநாதன் துசீந்தினி (வயது 26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர், கடந்த 11ஆம் திகதி சுகயீனம் காரணமாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 11

## ரவிராஜ், பரராஜசிங்கம், மகேஸ்வரன் படுகொலைகளை விசாரிக்கக் குழு!

### நியமிக்குமாறு சஜித் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 14

காலனித்துவ ஆட்சியில் படுகொலை செய்யப்பட்ட எட்வர்ட் ஹென்றி பேதிரிஸ் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க மூவரடங்கிய குழு நியமிக்கப்பட்டமை போன்று லசந்த விக்கிரமதுங்க, ஜோசப் பரராஜ சிங்கம், ரவிராஜ், மகேஸ்வரன் படு கொலைகள் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்ள விசேட குழு நியமிக்கப்பட வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை விசேட கூற்றை முன் வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு 11

## உலகத் தமிழர் பேரவையின் முயற்சி அரசாங்கத்துக்கான வெள்ளையடிப்பு

### கஜேந்திரகுமார் எம். பி. சாடல்

கொழும்பு, டிசெ. 14

தமிழர் தாயகத்தில் திட்டமிடப்பட்ட இன வழிப்பு நடவடிக்கைகளும் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளும் மேலோங்கியுள்ள சூழ்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மையமாகக் கொண்டு உலகத் தமிழர் பேரவை முன்னெடுத்துள்ள முயற்சி அரசாங்கத்துக்கு ‘வெள்ளையடிக்கும்’ செயல்பாடாகவே நாம் கருதுகிறோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் இதுவரை காணாத பெரும் சரிவொன் றைச் சந்திக்க நேரும் என்பதால் தமது வாக்குவங்கியைப் 11

## தனி நாடு கோரிக்கையை நாங்கள் ஆதரிக்கவில்லை!

### உலக தமிழர் பேரவையின் சுரேந்திரன்

கொழும்பு, டிசெ. 14

தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை என்று உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கின்றீர்களா என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கேள்வி எழுப்பியவேளை சுரேன் சுரேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று 11

## குறுகிய அரசியல் நோக்கத்துக்காக மறுசீரமைப்பை மேற்கொண்டால் நாடு மீண்டும் வங்குரோத்தடையும்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, டிசெ. 14

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட இரண்டாம் தவணை கடன் தொகையை இலங்கைக்கு வழங்க நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது. எனவே, நாடு வங்குரோத்து நிலை என்பதில் இருந்து நீங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையாற்றினார். இதன் போதே மேற்கண்டவாறு 11

## இலங்கை படை அதிகாரிகளுக்கு தடை: உறுதியான பதில் அளிப்பதற்கு தவறினார் பிரிட்டன் அமைச்சர்!

கொழும்பு, டிசெ. 14

இலங்கையில் போர் குற்றங்களில் ஈடுபட்ட படை அதிகாரிகளுக்கு எதிராக தடைகளை அறிவிக்கவேண்டும் என்று பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோள்களுக்கு பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் ஆன் மேரி டிரெவெல்யன் உறுதியான பதில் அளிக்கத் தவறினார்.

கொன்சவேர்ட்டிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர்களுக்கான அனைத்து கட்சி பாராளு மன்ற குழுவின் தலைவருமான எலியட் கோர்ல் பேர்ன் அமைச்சரை நோக்கி, “இலங்கையின் உயர் சமூகத்தை சேர்ந்த போர் குற்றங்களில் ஈடுபட்டனர் 11

## ஜனாதிபதியுடன் தமிழரசு எம்.பிக்கள் தனித்து சந்திப்பு

கொழும்பு, டிசெ. 14

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோர் நேற்று தனியாக சந்தித்து பேசினர்.

வடக்கு, கிழக்கை சேர்ந்த தமிழ் பாரளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசுவதாக 11

## இராணுவம், வனவள திணைக்களம் வசமுள்ள காணிகளை தந்தால் ரூ.582 கோடி வருமானமீட்டலாம்

### தென்னை பயிர் செய்கை சபை

கிளிநொச்சி, டிசெ. 14

வடக்கு மாகாணத்தில் இராணுவம், வன வளத் திணைக்களம் மற்றும் தரிசு நிலங்கள் உள்ளடங்கலாக ஏறத்தாழ 40 ஆயிரம் ஏக்கர் காணிகள் உள்ளன. இந்தக் காணிகளை தென்னை பயிர் செய்கைக்காக விடுவித்தால் 582 கோடியே 80 இலட்சம் ரூபாயை தேசிய வருமானமாக பெறலாம் - என்று 11

# இப்படியும் நடக்கிறது

நேற்றும் இந்தப் பத்தியில் தமிழ ரசு கட்சியின் தலைமைப் பதவியில் போட்டியிடுபவர்கள் பற்றியும் அதன் பெருந்தலைவர் சம்பந்தன் ஐயா, தெரிவு நடைபெறவிருக்கும் தருணத்தில் எழுப்பியிருக்கும் புகார் பற்றியும் எழுதியிருந்தேன்.

தான் அரசியலுக்குக் கொண்டு வந்த நபர்களே அவருக்கு எதிராக இயங்குவது பற்றியும் அவர் அதனை கண்டுகொள்ளாமல் இருக்கிறாரா என்று நினைத்திருந்தபோது, அவர் தனது ஆதரவாளர்கள் புறக்கணிக்கப் பட்டமை பற்றி முறையிட்டதும் அந்த விவகாரம் எப்படி முடியுமோ என்றும் சந்தேகம் கிளப்பியிருந்ததை வாசகர்கள் அறிவார்கள்.

தனக்கு துரோகம் செய்பவர்க ளுக்கு அல்லது தனக்கு எதிராக செயல்படுபவர்களுக்கு எதிராக செயல்படவேண்டும் என்று நினைப் பது மனித இயல்புதான். அது அரசியல்வாதிகளுக்கு சற்றுஅதிக மாகவே இருப்பதாகத்தான் மக்கள் நம்புவதுண்டு என்றும் நான் எழுதி யதைப் படித்துவிட்டு நண்பர் ஒருவர் கூறினார்,

'அது சரிதான். ஆனால், ஒரு தலைவருக்கு பழிவாங்கும் பண்பு இருக்கக்கூடாதல்லவா. சம்பந்த னுக்கும் இருக்காது' என்றார்.

அது உண்மைபோலத்தான் இப்போது தெரிகின்றது.

பதின்மூன்றாவது அரசியல மைப்பு சட்டத்தை அமுல்படுத்தக் கோரி தமிழ் கட்சிகள் அனைத்தை யும் ஒருங்கிணைத்து இந்திய பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்ப கூட்ட மைப்பின் பங்களிக் கட்சியான ரெலோ சில மாதங்களுக்கு முன்னர் முயற்சி செய்தது. அதற்காக யாழ்ப் பாணத்தில் முதலாவது கூட்டத்தை கூட்டியபோது, அதில் கலந்து கொண்ட மனோ கணேசனும் முஸ்லிம் காங்கிரஸின் ஹக்கீமும் அதில் சம்பந்தனின் வகிபாகத்தை வலியுறுத்தியபோது சம்பந்தனின் கலந்துகொள்ளலுக்காக அடுத்த கூட்டம் கொழும்பில் நடந்தது.

அந்தக் கூட்டத்தில் சம்பந்தனோ, பதின்மூன்றாவது திருத்தத்தில் இருந்து எவ்வளவோ தூரத்துக்கு நாங்கள் வந்துவிட்டோம் என்றும் அதனை மட்டும் வலியுறுத்தி எழுதப்படும் கடிதத்தில் கையெழுத்திட முடியாது எனவும் திட்டவட்டமாகத் தெரிவித்திருந் தார். சுயநிர்ணய உரிமை என்றும் சமஷ்டி எனவும் சம்பந்தன் விடாப் பிடியாக இருக்க மனோவும் ஹக் கீமும் அதிலிருந்து வெளியேறி னர்.

பலத்த இழுபறிகளுக்கு பின்னர், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்த கோரும் கடிதத்தில் சம்பந்தன் கையெழுத்திட்டார். பதின்மூன்று என்றில்லாமல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்றால், அதில் வடக்கு - கிழக்கு இணைப்பும் சேர்ந்து விடுகின்றது என்பது சம்பந்தனின் ஆறுதலாக இருந்திருக்கலாம்.

ஆனால், சம்பந்தன் அதில் கையெழுத்திட்டது தவறு என்றும் அதனால்தான், இந்தியா இப்போது பதின்மூன்றை வலியுறுத்துகின்றது. இல்லையென்றால் இந்தியா சமஷ்டிக்கு ஆதரவாக நின்றிருக்கும் எனவும் சம்பந்தனின் 'அரசியல் அறிமுகம்' சுமந்திரன் பின்னாட்க ளில் கூறியது ஞாபகமிருக்க லாம்.

ஆக, பதின்மூன்றை வலியுறுத்தி இந்தியாவுக்கு கடிதம் எழுத மாட் டேன் என்று அடம்பிடித்த சம்பந் தன் ஐயா, இப்போது உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளையும் சிறந்த இலங்கைக்கான மன்றத்தின் தேரர்களையும் சந்தித்து அவர்களின் 'இமாலய பிரகடனத்தை' பெற்றுக் கொண்டிருக்கிறார். அந்த வைபவத் தில் நமது சுமந்திரனும் பிரசன்னம்.

மோடியிடம் பதின்மூன்றை மட் டும் வலியுறுத்த மாட்டேன் என்று அடம்பிடித்த சம்பந்தன் அதனை வலியுறுத்தவும் அதுமாத்திரமன்றி- புதிதாக அரசியலமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்றும் அதிலும் மாகாண மட்டத்தில் அதிகாரம் பகிரப்படவேண்டும் எனவும் வலி யுறுத்தும் பிரகடனத்தைத்தான் இரு கரங்களாலும் பக்குவமாக வாங்கி யிருக்கிறார்.

மோடிக்கு கடிதம் எழுதியதால் தான் இந்தியா இப்போது பதின் மூன்றோடு நிற்கிறது என்று சுமந்திர ன் சொன்னதுபோல, இனி சுமந்திர னும் சம்பந்தனும், 'இமாலய பிரக டனத்தை' ஏற்றுக்கொண்டிருப்பதால் தான் ரணில் இப்போது மாகாண சபைகளோடு நிற்கிறார். இல்லை யென்றால், இரண்டாயிரத்து ஐந்து தேர்தலில் சொன்னதுபோல சமஷ்டி கட்டமைப்பை தந்திருப்பார் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின ரும் அதிகம் ஏன் தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப் பும்கூட சொல்வார்களோ தெரியவில்லை.

உலகத் தமிழர் பேரவையினர் சம்பந்தனை சந்தித்தபோது, அங்கே வைத்து அனைத்து தமிழ் கட்சிகளை யும் சந்திக்க உலகத் தமிழர் பேரவை யினர் முயன்றபோதிலும் அவர்களின் நோக்கத்தை நன்றாக புரிந்துகொண் டதாலோ என்னவோ, ஏனைய தமிழ் கட்சிகள் அதனை புறக்கணித்திருந் தன. முன்னணி அழைப்பை நிரா கரித்து அறிக்கை வெளியிட்டது போல ஏனையவர்கள் அறிக்கை வெளியிடாவிட்டாலும் அதனை புறக்கணித்திருக்கிறார்கள்.

ஒரு சினிமா படத்தில் நகைச்சுவை நடிகர் வடிவேலு சொன்னதுபோல, 'தனக்கு வந்தால் இரத்தம், மற்றவர்க ளுக்கு வந்தால் அது தக்காளிச்சட்னி' என்பதுபோல,

பதின்மூன்றை வலியுறுத்த ரெலோ முயன்றால் அது துரோகம், அதையே நாங்கள் செய்தால் அது தியாகம் என்றாகியிருக்கிறது நமது அரசியல்.

நண்பர் ஒருவர், ஒரு குறிப்பை அனுப்பியிருந்தார், 'அவர்கள் இனப்பிரச்னை பற்றி மாத்திரம் பேச வில்லை, நல்லிணக்கம், அபிவிருத்தி என்ற நல்ல விடயங்களையும்தானே பேசியிருக்கிறார்கள். அது நல்லது தானே' என்று.

நல்ல விடயம்தான், ஆனால் இன்று நமது மண் எதிர்நோக்குகின்ற மிக முக்கியமான பிரச்னையே பௌத்த மயமாக்கல்தான். அவ்வாறு வடக்கு - கிழக்கில் விகாரைகளை அமைக்கின்றபோது ஆக்ககுறைந்தது அந்தப் பகுதிகளில் வாழ்கின்ற தமிழ் மக்களுடன் முரண்பாடுகள் ஏற் படாதவாறாவது பார்த்துக்கொள் ளுங்கள் என்று பிரகடனத்தில் சேர்த்திருக்க வேண்டாம் - மகா நாயக்கர்களை சந்தித்தபோதாவது கேட்டிருக்க வேண்டாமா? என்று அந்த நண்பரிடம் கேட்டேன். நல்லிணக்கம் என்பது பிரகடனங்க ளின் மூலம் மட்டும் வந்துவிடுவ தில்லை.!

**- ஊர்க்குருவி.**

# மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், டிசெ. 14

சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வை முன்னிட்டு இலங்கை மனித உரி மைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய பணிமனை 'அனைவருக்கும் கண்ணியம், சுதந்திரம் மற்றும் நீதி' (Dignity, Freedom and Justice for All) எனும் தொனிப்பொருளில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது.

நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் கலைத்தூது அழகியல் கல்லூரியில் இந்த கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இதில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள மனித உரிமை பாதுகாவலர்களுக்கான வழிகாட்டல்கள் தொடர்பில் கலந்துரை யாடலும் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உத்தியோ கத்தர்கள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், சிவில் சமூகத்தினர், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# செயற்கை நுண்ணறிவு அம்புலன்ஸ் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்படும்

**ஹர்ஷ டி சில்வா எம். பி.**

கொழும்பு, டிசெ. 14

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத் துடனான 'சுவசெரிய' - 1990 அம்புலன்ஸ் சேவை யாழ்ப்பாணம், கொழும்பு மாவட் டங்களில் முதலில் ஆரம்பிக்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

1990 சுவ செரிய சேவையானது மிக்ஸ்ட் ரியாலிட்டி (MR) மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (AI) ஆகிய வற்றை பயன்படுத்தி அம்புலன்ஸ் வண்டி யையும் மருத்துவரையும்ஒருங்கிணைக்கும் முதலாவது நோயாளர் காவு வண்டி சேவையாக மாறியுள்ளது.

சுவ செரிய சேவையின் இந்த புதிய தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு முதலில் கொழும்பு, யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப் படும். பின்னர், நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்படும் என்றும் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, சுவ செரிய ஊழியர்க ளுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்குவதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண உறுதியளித்துள்ளார். (ஐ)

# வடக்கில் நெற்பயிர்களில் வெண்முதுகு தத்தி தாக்கம்

மன்னார், டிசெ. 14

வடக்கு மாகாணத்தில் நெற் பயிர்களில் வெண்முதுகு தத்தியின் தாக்கம் அதிகரித் துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 ஆயிரம் ஹெக்ரெயர், கிளிநொச்சியில் 800 ஹெக்ரெயர், முல்லைத்தீவில் 650 ஹெக் ரெயர், வவுனியா 700 ஹெக்ரெயர் நிலப் பரப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் நெல் பயிர்களில் ஏற்படும் 'வெண்முதுகு தாவர தத்தியின்' நோய்த் தாக்கம் தொடர்பாக நேற்று முன் தினம் மன்னார் மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தெளிவு படுத்தும் விசேட கலந்துரையாடல் மன் னார் உயிலங்குளத்தில் அமைந்துள்ள கட்டுக்கரை குள திட்ட முகாமைத்துவ குழுவின் கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

வட பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய உதவி பணிப்பாளர் எஸ். ராஜேஷ் கண்ணா தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில் விவசாய அமைப் புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டி ருந்தனர்.

வட மாகாணத்தில் தற்போது நெல் பயிர்களில் பெருமளவு சேதத்தை ஏற்படுத் தும் நோய்த் தாக்கம் தொடர்பாக விவசாய அமைப்பு பிரதிநிதிகளுக்கு பணிப்பாள ரால் இதன்போது தெளிவுபடுத்தப்பட் டது. அதனை தொடர்ந்து, நோய்த் தாக்கத்தின் பாதிப்புகள் தொடர்பாகவும் அதனை கட்டுப்படுத்துவதற்கான வழி முறைகள் மற்றும் பாவிக்கப்படவேண்டிய மருந்துகள் தொடர்பாகவும் பணிப்பாள ரால் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதேவவேளை, நெற்பயிர் செய்கையில் வட மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்கள் வெண் முதுகு தத்தியினால் பெரும் பிரச் னைகளுக்கும் சவால்களுக்கும் முகங் கொடுத்து வருவதாகவும், இதனால் 4 மாவட்டங்கள் முற்றாக பாதிக்கப்பட்டுள் ளன என்றும் வட பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய உதவி பணிப்பாளர் எஸ். ராஜேஷ் கண்ணா தெரி வித்தார். (ஐ)

# ஊசி மூலமான போதை பாவனை யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு!

**அரச அதிபர் தெரிவிப்பு**



யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றும் போக்கு அதிகரித்துள்ளது என்று மாவட்ட செயலா ளர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

சட்ட மருத்துவ அதிகாரிகளின் தக வல்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றுபவர் களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் பேசி நடவடிக்கைக்கு வலியுறுத்தியுள்ளேன். சில இடங்களை மையப்படுத்தி விசேட வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# பாடசாலை மாணவர்களுக்கு குறைந்த விலையில் கொப்பிகள்!

கொழும்பு, டிசெ. 14

பாடசாலை மாணவர்களுக்கு குறைந்த விலையில் அப்பியாச கொப்பிகளை வழங்கவுள்ளதாக அரச ஊடக பணிப்பா ளர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

அரசாங்க அச்சக திணைக்களத்தா லேயே மானிய முறையில் அப்பியாச கொப்பிகள் இவ்வாறு விற்பனை செய்யப் படவுள்ளன. பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் தொடர்பான விவரங்களை வழங்கி அப்பியாசக் கொப்பிகளை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

ஈழநாடு
Eelanadu
14.12.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில்!

உலக நிலைமைகள் வேகமாக மாறிவருகின்றன. பலம் பொருந்திய நாடுகளின் உள்நாட்டு அரசியல் தீர்மானங்களில் - புவிசார் அரசியல் போட்டிகளும் நாடுகளுக்கு இடையிலான எல்லை பிரச்னைகளும் பெருமளவுக்கு செல்வாக்கு செலுத்துகின்றன. இந்தியா ஒரு பிராந்திய சக்தி. உலகில் மிகவும் செல்வாக்குமிக்க நாடு. 'குளோபல் சவுத்'தின் முகம். சீனாவின் விரிவாக்கக் கொள்கையும் பாகிஸ்தானின் தீவிரவாத தலையீடுகளும் இந்தியாவின் அயலுறவு கொள்கையில் பெரியளவில் செல்வாக்கு செலுத்துகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் இந்தியாவின் ஆளும் பா. ஜ. க. அரசாங்கமானது ஜம்மு - காஷ்மீர் மாநிலத்துக்கான அரசியலமைப்பின் விசேட அந்தஸ்தை இரத்து செய்யும் சட்டமூலத்தை 2019இல் நிறைவேற்றியது.

இந்திய அரசியலமைப்பின் 370ஆவது பிரிவு ஜம்மு மற்றும் காஷ்மீருக்கான விசேட அந்தஸ்தை வழங்கியிருந்தது. 1949இல் நேரு தலைமையிலான காங்கிரஸ் நிர்வாகம் இந்த விசேட அந்தஸ்தை வழங்கியிருந்தது. இதன் மூலம் - இந்தப் பகுதி சுய ஆட்சிக்கான தகுதியைப் பெற்றிருந்தது. இதற்கென சொந்த அரசியல் யாப்பு மற்றும் சுயாதீனமான கொடியையும் கொண்டிருந்தது. அனைத்து விடயங்களிலும் சுயாதீனமான அரசியல் தீர்மானங்களுக்கான உரிமையை பெற்றிருந்தது. அந்தத் தகுதிநிலையையே பா. ஜ. க. அரசாங்கம் 2019இல் நீக்கியது. இது சமஷ்டி கோட்பாட்டை பலவீனப்படுத்துவதாகக் கூறி இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வாறானதொரு பின்னணியில்தான் அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானம் சரியானது என்று இந்திய உச்ச நீதிமன்மன்றம் தற்போது தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

இதிலிருந்து ஈழத் தமிழர்கள் எதைக் கற்றுக்கொள்ள முடியும்? 2022இல் ஆறு தமிழ் கட்சிகள் இணைந்து இந்திய பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தன. இலங்கையின் அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரியே அந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. இந்த முயற்சியை கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளில் ஒன்றான ரெலோவே முன்னெடுத்திருந்தது. எனினும், பின்னர் இரா. சம்பந்தன் குறித்த கடிதத்தில் சமஷ்டியை வலியுறுத்தினால்தான், தான் கையெழுத்திடுவேன் என்று கூறி அடம்பிடித்தார். பின்னர் கடிதத்தில் சமஷ்டியும் உள்வாங்கப்பட்டது. அதன் பின்னர் இரண்டாவது கடிதமொன்றும் அனுப்பப்பட்டது. ஆனால், மூன்று கடிதங்கள் அனுப்பப்பட்டன. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழுள்ள மாகாண சபை முறைமையை நிராகரித்து, சமஷ்டி தீர்வை பெற்றுத் தருவதற்காக பிரதமர் மோடி தலையீடு செய்ய வேண்டுமென்று கோரியிருந்தார். அதனைத் தொடர்ந்து இரா. சம்பந்தனும் அவ்வாறானதொரு கடிதத்தை அனுப்பியிருந்தார்.

இலங்கைத் தீவில் எண்ணிக்கையில் சிறுபான்மையான ஈழத் தமிழ் மக்களுக்கு சமஷ்டி அரசாங்கமொன்றை வழங்குமாறு இந்தியா அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது. இந்த விடயத்தை தெளிவாக புரிந்திருந்தால், அவ்வாறான கடிதங்களை பிரதமர் மோடிக்கு அனுப்ப வேண்டிய தேவை இருந்திருக்காது. கஜேத்திரகுமாரின் உள்நோக்கம் மிகவும் தெளிவானது - அதாவது, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான 13ஆவது திருத்தத்தை முற்றிலுமாக இல்லாமல் ஆக்குவது. தமிழ் அரசியல் கட்சிகளின் பலவீனத்தை தெளிவான புரிந்து கொண்டதன் பின்புலத்தில்தான் மக்கள் முறைப்பாட்டுக்கான வடக்கு - கிழக்கு சிவில் சமூகம் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் தலையீடு செய்யுமாறு கோரி இந்திய பிரதமருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தது.

இந்தியாவிடம் எதைக் கோர வேண்டுமோ - அதனையே கோர வேண்டும். அதுதான் சரியானது. அவ்வாறில்லாது, இந்தியாவின் இலங்கை தொடர்பான கொள்கை நிலைப்பாட்டுக்கு புறம்பான விடயங்களை கோருவதால் ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியா நேரடியாக தலையிடுவதில் அவை சிக்கல்களையே ஏற்படுத்தும். அது மேலும் ஈழத்தமிழர்களையே பாதிக்கும். இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் - ஒரு விடயத்தை உறுதியாக கூறிச் சென்றிருந்தார். 13ஆவது திருத்தச்சட்ட விடயத்தில் இந்தியா உங்களோடு நிற்கும்.

# பொது மக்களின் காணி பிரச்னை தொடர்பில் ஆணைக்குழு பிரதிநிதிகள் கலந்துரையாடல்!



*யாழ்ப்பாணம், டிசெ. 14*

யாழ்ப்பாணத்தில் நிலவும் காணிப் பிரச்னைகள் குறித்து, உண்மை, ஒற்றுமை, நல்லிணக்கத்துக்கான சுயாதீன ஆணைக்குழுவின் இடைக்கால செயலக பிரதிநிதிகள் யாழ். மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) சிறி மோகனனை சந்தித்து கருத்துகளை கேட்டறிந்தனர்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் வனப் பிரதேசம் என அடையாளப்படுத்த ப்பட்டுள்ள தனியார் காணிகள், வேறு காரணங்களுக்காக அரசாங்க வசமுள்ள தனியார் காணிகள் குறித்து பொது மக்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் இடைக்கால செயலக பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இந்த முறைப்பாடுகள் குறித்தும் தற்போதைய காணி நிலவரம் குறித்தும் இடைக்கால செலயக பிரதிநிதிகள், மேலதிக மாவட்ட செயலாளரிடம் விரிவாக கேட்டறிந்தனர்.

காணி விவகாரத்தில் பொதுமக்களின் சந்தேகங்கள், கேள்விகள் ஆகியவை குறித்தும் யாழ். மேலதிக மாவட்ட செயலாளரின் கவனத்துக்கு இடைக்கால செயலக பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவங்ச இதன்போது கொண்டு வந்தார்.

இதுகுறித்து யாழ். மேலதிக மாவட்ட செயலாளரிடமுள்ள காணி விடயங்கள், தரவுகள் குறித்தும் இடைக்கால செயலக அதிகாரிகள் கேட்டறிந்தனர். அத்துடன், காணிப் பிரச்னைகள் குறித்தும் இதற்கான தீர்வுகள் குறித்தும் மேலதிக செயலாளரின் கருத்துக்களையும் சிபாரிசுகளையும் ஆணைக்குழுவுக்கான சிபாரிசுகளில் உள்ளடக்குவதாக இடைக்கால செயலக பணிப்பாளர் நாயகம் இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பில், இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவங்சவுடன் இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் நிறைவேற்று அதிகாரி மற்றும் சட்ட விவகாரங்களுக்கான அதிகாரி அஸ்வினி அப்பங்கம, செயலகத்தின் கொள்கைப் பிரிவு தலைவர் கலாநிதி தங்க ராஜா, பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ஐ)

# வடக்கு, கிழக்கை பிரித்ததற்கு ஜே. வி. பி. மன்னிப்பு கோருமா!

## ஐங்கரநேசன் கேள்வி

*யாழ்ப்பாணம், டிசெ. 14*

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின் ஊடாகத் தமிழ் மக்களைத் தங்களுடன் இணையுமாறு கோரிக்கை விடுத்திருக்கிறார். தங்கள் மரபுவழித் தாயகமான இணைந்த வடக்கு - கிழக்கை நீதிமன்றபடியேறிச் சட்ட ரீதியாகப் பிரித்தது ஜே. வி.பி என்பதைத் தமிழினம் ஒருபோதும் மறவாது. இந்நிலையில், தமிழ் மக்களைத் தங்களுடன் இணையுமாறு கோருகின்ற ஜே. வி. பி. வடக்கு - கிழக்கை பிரித்தமைக்காக தமிழ் மக்களிடம் மன்னிப்பையுமல்லவா கோரவேண்டும். அவ்வாறு கோருமா?


இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்.

ஜே. வி. பியின் அழைப்பு தொடர்பாக நேற்று அவர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1944ஆம் ஆண்டில் கூட்டிய கொழும்புப் பிரஜைகளின் பொதுக்கூட்டத்தில் சுதந்திர இலங்கையின் அரசியல் அமைப்புக் கொண்டிருக்கவேண்டிய கோட்பாடுகள் குறித்து வலியுறுத்தியிருந்தது. அவற்றில், இனங்களுக்குச் சுயநிர்ணயம் தொடர்பாக பாரதீனப்படுத்த முடியாத உரிமை இருந்து வருகிறது என்பதை அங்கீகரிப்பதும் அவர்கள் விரும்பினால் அவர்களுக்கே உரித்தான சுயாதீன அரசுகளை உருவாக்கிக்கொள்ள முடியுமென்பதை அங்கீகரிப்பதும் ஒரு கோட்பாடாகும்.

ஆனால், கம்யூனிச சித்தாந்தத்தின் அடியொற்றிகளாகத் தங்களைக் கூறிக்கொள்ளும் ஜே. வி. பி. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பற்றி இதுவரையில் தெரிவித்ததில்லை. தமிழ் மக்களை தங்களுடன் இணையக் கோருகின்ற ஜே. வி. பி அவர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வதாகவுமல்லவா தெரிவிக்கவேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளுமா? என்றும் அவர் கேட்டுள்ளார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**டிசெம்பர் - 14 வியாழக்கிழமை**
**சோபகிருது வருடம் - கார்த்திகை 28**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 01.30 - 03.00**
**திதி : துவிதியை**




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலி பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். ஈகோ அதிகரிக்கும். வேலைச்சுமையான நாள்.

**இடபம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். மகிழ்ச்சியும் ஆதாயமும் உண்டாகும். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சி கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். நல்லன நடக்கும்.

**கடகம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். புதிய அதிகாரிகளின் வழி வந்தவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்கள் சிறப்பாக முடியும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. சக ஊழியர்கள் மதிப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்ததெல்லாம் பால் என்று நினைத்து கொள்ளாதீர். வியாபாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். அதிகாரிகளிடம் கவனம் தேவை. பொறுமைத் தேவைப்படும் நாள்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் மன ஸ்தாபம் வந்து நீங்கும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். விவாதங்களை தவிர்க்க வேண்டிய நாள்.

**மகரம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வீடு மனை வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள்.

**கும்பம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் மனதில் நிழலாடும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். மரியாதைக் கூடும். மதிப்பு மரியாதை அதிகரிக்கும்.

**மீனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

# காங்கிரஸ்டன் கூட்டணி அமைக்க அ. தி. மு. க. திரைமறைவில் முயற்சி?

சென்னை, டிசெ. 14

பாராளுமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் கூட்டணி வியூகங்களும் தீவிரமாகி உள்ளன.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து கடந்த செப்ரெம்பர் மாதம் அ. தி. மு. க. வெளியேறியது. அதன்பிறகு அ. தி. மு. க.வை சிறுபான்மையினருக்கு ஆதரவான கட்சி என்பதை அந்த மக்கள் மத்தியில் நிலை நிறுத்துவதற்காக எடப்பாடி பழனிசாமி தீவிர முயற்சிகளை மேற்கொண்டார்.

பாரதிய ஜனதாவுடன் இனி எந்த காலத்திலும் கூட்டணி கிடையாது என்று அறிவித்த எடப்பாடி பழனிசாமி தி. மு. க., மற்றும் பாரதிய ஜனதாவுக்கு எதிராக வலுவான கூட்டணியை உருவாக்க முயற்சித்து வருகிறார்.

இந்தியா கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ், தி. மு. க. உறவு தமிழகத்தில் பலமாக இருந்தாலும் அகில இந்திய அளவில் நெருடல்களை ஏற்படுத்தி உள்ளது.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் சனாதன தர்ம எதிர்ப்பு பேச்சு மற்றும் தி.மு.க. எம்.பி. யின் கோ மூத்திர பேச்சு ஆகியவை டில்லி காங்கிரஸ் தலைவர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றன. இது தொடர்பில் பகிரங்கமாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்த சந்தர்ப்பத்தில் காங்கிரஸுடன் கைகோப்பதற்கு அ. தி. மு. க. தரப்பில் திரைமறைவு வேலைகள் நடந்து வருகின்றன என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பாக அ.தி.மு.க. எம்.பி. தம்பித்துரை டெல்லியில் காங்கிரஸ் முக்கிய தலைவர்களை சந்தித்து பேசி வருகிறார் என்றும் கூறப்படுகிறது.

குறிப்பாக தி. மு. க. அமைச்சர்கள் மீது நடந்து வரும் வருமானவரி சோதனைகள், சமீபத்தில் ஏற்பட்ட புயல் மழை பாதிப்பில் அரசின் செயல்பாடுகள் ஆகியவை மக்கள் மத்தியில் தி. மு. கவின் செல்வாககை குறைத்திருப்பது பற்றியும் காங்கிரஸ் தலைவர்களிடம் எடுத்த கூறி வருகிறார்கள். எனவே, பாராளுமன்ற தேர்தலில் ஆளும் கட்சி மீதான அதிருப்தி வெற்றியை தேடி தரும் என்று எடுத்து சொல்லி காங்கிரஸ் தலைவர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

அ. தி. மு. கவுக்கு தேர்தல் வியூகம் வகுத்து கொடுத்து வரும் சிலரும் டில்லி காங்கிரஸ் தலைவர்களிடம் அ. தி. மு. க. கூட்டணியே கை கொடுக்கும் என்று கூறி இருக்கிறார்கள்.

ஏற்கனவே தி. மு. க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையே தொகுதி பங்கீடு பற்றிய சந்தேகம் இருந்து வருகிறது. காங்கிரஸுடன் உறவை வளர்த்து கொள்வதன் மூலம் இந்தியா கூட்டணியில் இடம் பிடித்து விட முடியும் என்று அ. தி. மு. க. கருதுகிறது. அவ்வாறு காங்கிரஸுடன் கூட்டணி ஏற்படும் நிலையில் மேலும் சில கட்சிகள் தங்கள் பக்கம் வருவார்கள் என்று எடப்பாடி பழனிசாமி கணக்கு போட்டுள்ளார்.

எடப்பாடி பழனிசாமி யின் கூட்டணி நகர்வுகள் கை கொடுக்குமா? என்பதற்கு எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறும் இந்தியா கூட்டணி கூட்டத்துக்கு பிறகு தெளிவு கிடைக்கும் என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள். (ஐ)

# பேச்சுக்கு வருமாறு முதல்வருக்கு ஆளுநர் ரவி அழைப்பு விடுத்தார்!

சென்னை, டிசெ. 14

நிலுவையில் உள்ள சட்ட தீர்மானங்கள் தொடர்பாக பரஸ்பரம் அமர்ந்து பேசி முடிவெடுக்க முதல்வர் ஸ்டாலினுக்கு ஆளுநர் ஆர். என். ரவி அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழக முதல்வர் - ஆளுநர் இடையே பல்வேறு பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. எனவே, முதல்வரை நேரில் அழைத்து ஆளுநர் பேசி இந்த முட்டுக்கட்டைகளை அகற்றினால் இந்த நீதிமன்றம் வெகுவாக பாராட்டும் என உச்சநீதிமன்றம் அறிவுறுத்தி இருந்தது.

மேலும், நிறுத்தி வைத்த சட்ட தீர்மானங்களை அவர் சட்ட சபைக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதை, திருத்தியோ அல்லது திருத்தம் செய்யாமலோ சபை மீண்டும் நிறைவேற்றினால், அதை ஏற்றுக் கொள்வதை தவிர ஆளுநருக்கு வேறு வாய்ப்பு இல்லை என உச்சநீதிமன்ற நீதிபதிகள் கூறியிருந்தனர்.

இந்நிலையில், நிலுவையில் உள்ள சட்ட தீர்மானங்கள் தொடர்பாக பரஸ்பரம் அமர்ந்து பேசி முடிவெடுக்க முதல்வர் ஸ்டாலினுக்கு ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ)

# அமித்ஷாவை புதுடில்லியில் சந்திக்க செல்கிறார் உதயநிதி!

சென்னை, டிசெ. 14

வெள்ள பாதிப்பு நிவாரண தொகையை கூடுதலாக வழங்குமாறு கோரி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை, தி. மு. க., அமைச்சர் உதயநிதி சந்தித்து பேசுவதற்கு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இது குறித்து தி. மு. க. தரப்பிலிருந்து வெளியான தகவல்களின் அடிப்படையில்,

எதிர்வரும் 18ஆம் திகதி, கோவைக்கு முதல்வர் ஸ்டாலின் செல்கிறார். அங்கு நடக்கும் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். அன்றைய தினம் சென்னைக்கு திரும்புகிறாரா அல்லது கோவையிலிருந்து டில்லி செல்கிறாரா என்பது இன்னும் உறுதியாகவில்லை.

ஸ்டாலின் டில்லி செல்லும் பட்சத்தில், நிவாரண தொகையை கேட்டுப் பெறுவதற்கு பிரதமர் அல்லது மத்திய அமைச்சர்களை சந்தித்து பேசுவாரா என்பது இன்னும் முடிவாகவில்லை.

அரசியல் ரீதியாக, பிரதமர் மோடியை எதிர்ப்பதில் உறுதியாக இருக்கிறேன் என்பதை, 'இந்தியா' கூட்டணி தலைவர்களுக்கு வெளிப்படுத்துவதற்காக, மோடியை ஸ்டாலின் சந்திப்பதை தவிர்க்கவும் வாய்ப்பு உள்ளது.

அதேபோல, அமித்ஷாவை சந்தித்து, வெள்ள நிவாரண தொகையை கூடுதலாக பெறுவதற்குரிய கோரிக்கை மனு வழங்குவதற்கான ஏற்பாடுகளும் உதயநிதி தரப்பில் செய்யப்பட்டுள்ளது என அறிய வந்தது.

(ஐ)

# யாருடன் தேர்தல் கூட்டணி அமைப்பது விஜயகாந்த் தலைமையில் கூட்டம்!

சென்னை, டிசெ. 14

தே. மு. தி. க. செயல்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் சென்னையை அடுத்துள்ள திருவேற்காட்டில் இன்று நடைபெறுகிறது.

இந்த கூட்டத்துக்கு தே. மு. தி. க. தலைவர் விஜயகாந்த் தலைமை தாங்குகிறார். இன்றுநடைபெறவுள்ள செயல் குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. வெள்ள பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளை வலியுறுத்தி இந்த கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலை எதிர்கொள்வது குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது. கடந்த பாராளுமன்ற தேர்தலில் பாரதிய ஜனதா கூட்டணியில் தே.மு.தி.க. இடம்பெற்றிருந்தது. அப்போது அ. தி. மு. க. வும் அந்த கூட்டணியில் இடம் பெற்றிருந்தது.

தற்போது பாரதிய ஜனதா கூட்டணியில் இருந்து அ. தி. மு. க. வெளியேறிய நிலையில் தே. மு. தி. க. யாருடன் இணைந்து தேர்தலை சந்திக்கப் போகிறது? என்பது பற்றியும் கூட்டணி குறித்தும் முக்கிய முடிவுகள் எடுக்கப்படவிருக்கின்றன என்றுதகவல்கள் வெளியாகியுள்ளன.

(ஐ)

# பொதுத் தேர்தலை முதலில் நடத்துக!

**ரணிலிடம் சகாக்கள் கோரிக்கை**

கொழும்பு, டிசெ. 14

**முதலில் பாராளுமன்றத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அவருக்கு நெருக்கமான பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர் என தெரியவருகின்றது.**

நாடு தழுவிய ரீதியில் நடத்தப்பட்ட ஒரு கருத்து கணிப்பை அடிப்படையாகக்கொண்டே அவர்கள் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர் எனவும் அறிய முடிகின்றது.

அவ்வாறு நடைபெறும் தேர்தலில் பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டணியாக போட்டியிட்டால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அது சாதகமாக அமையும் என சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அடுத்த வருடம் தேர்தல் நிச்சயம் நடைபெறும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். எனினும், முதலில் ஜனாதிபதி தேர்தலா, பொதுத்தேர்தலா என்பதை அவர் உறுதியாக அறிவிக்கவில்லை.

பாராளுமன்றத்தை தற்போது கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதி வசம் உள்ளது. (அ)

## வரி செலுத்தாதவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்!

கொழும்பு, டிசெ. 14

"வரி செலுத்தாதவர்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்து வரும் நிலையில் இது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும்" என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் பொருளாதாரம் முழுமையாக வீழ்ச்சியடைந்து காணப்படும் ஒரு சந்தர்ப்பத்தில் இந்த வரி திருத்தங்களை பொது மக்களால் தாங்கிக்கொள்ள முடியாது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால் அவ்வாறு செய்யாமல் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. வரி அதிகரிப்பதை மக்கள் தாங்கிக்கொண்டாலும் அது தொடர்பில் மக்களிடம் எதிர்ப்பு இருக்கின்றது. வரி செலுத்துவதில் இருக்கும் வெறுப்பை பார்கிலும் வரி தொடர்பான நிர்வாகம் வலுவாக காணப்படாமையே இதற்கு காரணம்.

வரி அதிகரிப்பதானது அரச வருமானத்தை ஈட்டுவதற்காக மாத்திரம் முன்னெடுக்கப்படும் மாற்று வழி அல்ல.

வரி அறவிடல் மற்றும் வரி செலுத்தல் நடவடிக்கையில் அனைவருக்கும் அது சமமாக பகிரப்படுகின்றது.

அதேநேரம் வரி செலுத்தாதவர்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அது தொடர்பிலும் அரசாங்கம் அவதானம் செலுத்தி நடவடிக்கை எடுக்கும்-என்றார்.

## கந்தகாடு புனர்வாழ்வு நிலைய சம்பவம் ஆராய்வதற்கு ஐந்து பேர் அடங்கிய குழு!

கொழும்பு, டிசெ. 14

வெலிகந்தை-கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக ஐவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி இதனை தெரிவித்தார்.

விரைவில் விசாரணை மேற்கொண்டு 3 நாட்களுக்குள் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அவர் குறித்த குழுவுக்கு பணித்துள்ளார்.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து தப்பிச் சென்ற கைதிகளில் 129 பேர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் 9 பேர் தொடர்ந்தும் தேடப்படுகின்றனர். (அ)

## யாழ்ப்பாணத்தில் சீனிக்கு செயற்கைத் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ்ப்பாண மாவட்டத்தில் சீனியை பதுக்கி செயற்கைத் தட்டுப்பாடு ஏற்படுத்தப்படுவதாகவும், அவர்களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றும் போக்கு அதிகரித்துள்ளதாகவும் மாவட்ட செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை அடுத்த ஆண்டில் இலகுவாகும்!

கொழும்பு, டிசெ. 14

அடுத்த ஆண்டு முதல் தற்போதுள்ள கல்வி முறையில் பல முக்கிய மாற்றங்களைச் செய்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை இலகுவாக்குவதற்கு கல்வி அமைச்சு எதிர்பார்க்கிறது.

மாணவர்களின் எழுத்தறிவு மற்றும் எண்ணியல் திறன்களை அளவிடுவதற்கு முன்னுரிமை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2023 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய சித்திகளைப் பெற்ற மாணவர்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை மதிப்பீடு செய்யும் நிகழ்வில் அமைச்சர்



அமைச்சில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில், எதிர்காலத்தில் மாணவர்கள் தேர்வில் 100 வீத மதிப்பெண்கள் பெற்றதன் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பெறப்பட்ட மதிப்பெண்களில் 30வீத மற்றும் தரம் 4 மற்றும் 5 இல் வகுப்பறையில் நடத்தப்பட்ட மதிப்பீட்டில் பெறப்பட்ட மதிப்பெண்களில் 30வீத பெற வேண்டும், இதற்காக மாணவர்களின் தொடர்ச்சியான வருகை இருக்க வேண்டும்.

ஆசிரியர்கள் பக்கச்சார்புடன் நடந்து கொள்வார்கள் என்று சில பெற்றோர்கள் விமர்சிக்கலாம். ஆனால் இதுபோன்ற சூழ்நிலைகளுக்கு இடமில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் சிறந்த நம்பிக்கையை உருவாக்குவது முக்கியம்.

பாடசாலை வளர்ச்சி அமைப்புகள் வகுப்பறைகளில் மாணவர்களை கண்காணித்து மதிப்பீடு செய்ய வேண்டும்.

சிறந்த கல்வியைக் கொண்ட நாடாக அங்கீகரிக்கப்பட்ட பின்லாந்திலும் பாடசாலைகளில் தரம் 9 வரை வகுப்பறை மட்ட மதிப்பீடுகள் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன. தரம் 9 முதல் மாணவர்கள் பரீட்சை மூலம் மதிப்பீடு செய்யப்படுகின்றனர்-என்றார்.

# நீதிபதியின் இடமாற்றத்துக்கு எதிராக நுவரெலியாவில் நேற்றுப் போராட்டம்!

கொழும்பு, டிசெ. 14

நுவரெலியா நீதிவான் திருமதி குஷிகா குமாரசிறி எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் மஹியங்கனை மாவட்ட நீதிமன்றத்துக்கு மேலதிக பதில் மாவட்ட நீதிபதியாக இடமாற்றம் செய்ய மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா பிரதான நகரின் பொது மக்கள், வியாபாரிகள், விவசாயிகள் என பலரும் இணைந்து நேற்றுக் காலை நுவரெலியா பிரதான தபால் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் திறமையின்மையினால் வழக்குகள் தாமதப்படுவதாக நீதவான் குற்றம் சுமத்தியதையடுத்து, நவம்பர் 06ஆம் திகதி நீதிவானின் பணிப்புரைக்கு எதிராக திட்டமிட்ட வகையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் நீதிமன்றக் கடமைகளில் இருந்து வெளியேறியதால் நுவரெலியா நீதிவான் திருமதி குஷிகா குமாரசிறிக்கு தண்டனையின் அடிப்படையில் மஹியங்கனை மாவட்ட நீதிமன்றத்துக்கு மேலதிக பதில் மாவட்ட நீதிபதியாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் நுவரெலியா நீதிமன்றத்தின் வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்தி தவறுகள் குறித்து உரிய தண்டனை வழங்கி பொதுமக்கள் குறித்து அதிகம் கவனம் செலுத்தும் நீதிவான் திருமதி குஷிகா குமாரசிறியை இடமாற்றம் செய்வதை தாங்கிக்கொள்ளமாட்டோம் எனவும் நீதிபதியை தொடர்ந்தும் நுவரெலியா நீதிமன்றத்தில் கடமையாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் நீதிபதியின் இடமாற்றம் உடனடியாக இரத்துச்செய்யப்பட வேண்டுமெனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் இடமாற்றத்தை இரத்துச் செய்யக்கோரி எதிரான வசனங்கள் எழுதிய பதாதைகளை தாங்கியவாறு கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர். (அ)

# 20ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் பல்வேறு வன்முறைகளினால் பாதிப்பு

## குடும்ப சுகாதார பணியகம் தகவல்

கொழும்பு, டிசெ. 14

**நாட்டில் இவ்வருடம் 20,000 க்கும் மேற்பட்ட பெண்கள் பல்வேறு வன்முறைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தின் சமூக மருத்துவர் ஆலோசகர் வைத்தியர் நெதாஞ்சலி மபிடிகம தெரிவித்தார்.**

மேலும், நாட்டில் கருவுற்ற பெண்கள் கூடுதலாக வன்முறைக்கு ஆளாகுவதாக அவர் கூறினார்.

பெண்களுக்கு எதிரான பாலியல், பாலின அடிப்படையிலான வன்முறைகளை தடுப்பதற்கான தேசிய செயல்திட்டத்தின் உள்ளடக்கங்களைப் பற்றி விவாதிப்பதற்கான ஒரு செயலமர்விலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வு பாராளுமன்றத்தில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேரவையின் தலைவி வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மற்றும் குழந்தைகள், பெண்கள் மற்றும் பாலினம் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவி தலதா அத்துக்கோரள ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்கள்,

வீடுகள் மற்றும் பணியிடங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகளைத் தடுப்பதற்கு திட்டங்கள் திறம்பட நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர்.

அதன்படி, பெண்கள், சிறுவர்கள் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சகத்தின் கீழ், 18 துறைகளில் கவனம் செலுத்தும் 13 அமைச்சகங்களின் செயற்திட்டங்கள் தொடர்பாக இந்த பல்துறை தேசிய செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. (அ)

# மின்சாரக் கட்டணம் ஜனவரி திருத்தப்படும்



கொழும்பு, டிசெ. 14

அடுத்த வருடம், ஜனவரி மாத நடுப்பகுதியில் மீண்டும் மின் கட்டணங்கள் திருத்தப்படும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஆண்டு நாட்டில் போதிய அளவு மழைவீழ்ச்சி காணப்படவில்லை. ஆனால் இந்த ஆண்டு மழைவீழ்ச்சியின் அளவு அதிகரித்துள்ளது.

இதனால் அதிகளவில் நீர் மின்சாரத்தை பயன்படுத்தக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இதேவேளை தற்போதுள்ள நிலக்கரி தொழிற்சாலை மற்றும் டீசல் தொழிற்சாலைகளை நிறுத்தி வைக்க முடிந்துள்ளமையும் நன்மையான செய்தியாகும். இதன் காரணமாக மின் கட்டணம் குறைய வாய்ப்புக் காணப்படுகின்றது.

எனவே நுகர்வோருக்கு நன்மை பயக்கும் வகையில் டிசம்பர் 31 ஆம் திகதி எங்களின் இருப்புநிலை அறிக்கை நிறைவடைந்த பின்னர் ஜனவரி மாத நடுப்பகுதியில் மீண்டும் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம்- என்றார். (அ)

# பெண்ணுக்கு ஆபாசமான சைகை காண்பித்த பஸ் சாரதிக்கு பிணை!

கொழும்பு, டிசெ. 14

கார் ஓட்டிச் சென்ற பெண்ணுக்கு ஆபாசமாக கையால் சைகை செய்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தனியார் பஸ் சாரதியை கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசிங்க 100,000 ரூபா சரீரப் பிணையில் விடுவித்துள்ளார்.

கொழும்பு 7 இல் வசிக்கும் 44 வயதான பெண்ணொருவர் இந்த சம்பவம் தொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

கொழும்பு ஏழு பகுதியில் தனது மகளுடன் காரில் பயணித்துக் கொண்டிருந்தபோது 138 வழித்தடத்தில் பஸ்ஸை இயக்கும் சாரதி ஒருவர் தனது காரை மறித்ததாகவும், பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்டபோது ஆபாசமாக கையால் சைகை செய்ததாக அவர் முறையிட்டுள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபரை கைது செய்து நேற்று முன் தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். (அ)

# ஜூனுக்கு முன்னதாக கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தங்களை இறுதி செய்யுமாறு கோரிக்கை

கொழும்பு, டிசெ. 14

அடுத்த வருடத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படும் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் இரண்டாவது மீளாய்வுக்கு முன்னர் இலங்கை தனது உத்தியோகபூர்வ மற்றும் தனியார் கடன் வழங்குநர்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

கொள்கையளவில் கடன் வழங்குநர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் இரண்டாவது மறுஆய்வுக்கு முன் உண்மையான ஒப்பந்தங்களாக மாற்றப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் தூதுவர் பீட்டர் ப்ரூயர் தெரிவித்துள்ளார்.

அதன்படி அடுத்தாண்டு மார்ச் அல்லது ஏப்ரல் மாதங்களில் கொழும்புக்கு விஜயம் செய்ய சர்வதேச நாணய நிதியம் திட்டமிடப்பட்டுள்ளதோடு ஜூன் மாதத்திற்குள் இரண்டாவது மதிப்பாய்வை முடிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை, பிரான்ஸ், சீனா மற்றும் இந்தியா தலைமையிலான உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழுவுடனும் மற்றும் சீனாவின் எஸ்சிம் வங்கியுடனும் கொள்கை ரீதியில் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்ப்பாணத்தில் புளியமரங்கள் நடுமாறு அரச அதிபர் பணிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ்ப்பாண மாவட்டத்தில் அனைத்து பிரதேச செயலகங்களிலும் பொருத்தமான இடங்களில் புளியமரங்களை நாட்டுமாறு பிரதேச செயலாளர்களுக்கு மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனை மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஐம்பது ஆண்டுகளில் பயன்தரு புளியமரம் நாட்டிய தாக வரலாறு இல்லை. தற்போது உள்ள புளியமரங்கள் எல்லாமே இயற்கையாக விதை மூலம் பரவியதே. அவையும் தற்போது வெட்டப்பட்டு கொண்டிருக்கிறது.

தற்போது நாட்டுக்கு தேவையான புளி இறக்குமதி செய்யப்படுகிறது. ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் பொருத்தமான இடங்களில் புளியமரங்களை நாட்டுமாறு பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் உதவியை கோரியுள்ளேன். எதிர்காலத்தில் புளிக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும்.

தற்போது புளியமரத்தை நாட்டினால் பத்து பதினைந்து வருடங்களில் புளிக்கு தட்டுப்பாடு இல்லாத நிலை ஏற்படும்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கே உரித்தான பாரம்பரிய பழ மரங்கள் வெட்டப்படுகிறது. மா மரம், பலா மரம் என்பன வெட்டப்படுகிறது. இது தொடர்பில் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படும். பாரம்பரிய பழ மரங்களை பாதுகாக்க வேண்டிய தேவை காணப்படுகிறது -என்றார். (அ)

# போதகர் ஜெரோமின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 14

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

கோட்டை நீதவான் முன்னிலையில் அவர் மீண்டும் இன்று முன்னிலைப்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக குற்றப் புலனாய்வுப் பிரிவில் இரண்டாவது நாளாக முன்னிலையாகியபோது போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டார்.

மதங்களை இழிவுப்படுத்தும் வகையில் கருத்துரைத்ததாக குற்றம் சாட்டப்பட்ட ஜெரோம் பெர்னாண்டோ, வெளிநாட்டு தடை விதிக்கப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் சிங்கப்பூருக்கு சென்றிருந்தார்.

அவரது கருத்துக்கள் தொடர்பாக பல மாதங்களாக சர்ச்சை தொடர்ந்த நிலையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி அவர் நாடு திரும்பியிருந்தார்.

இதனை தொடர்ந்து வாக்கு மூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி இருந்த நிலையில், அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (அ)

# யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ மாணவன் மறியலில்!

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் போதை மாத்திரை மற்றும் போதைப் பொருளுடன் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் அவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பிரதேசத்தில் போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகளுடன் நடமாடுவதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த மாணவன் கைது செய்யப்பட்டார்.

குறித்த மாணவன் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது நீதவான் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டப்பட்டது.

குறித்த மாணவன் ஏற்கனவே திருநெல்வேலிப் பகுதியில் போதை தலைக்கேறி ரகளையில் ஈடுபட்ட நிலையில் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (அ)

# வர்த்தக நிலையத்தை உடைத்து கொள்ளை!

## யாழில் 3 சந்தேக நபர்கள் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 14

அச்சுவேலி - புத்தூர் பகுதியில் வர்த்தக நிலையத்தை உடைத்து அங்கிருந்த பொருட்களை கொள்ளையடித்துச் சென்றவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

புத்தூர் கலைமதி பகுதியைச் சேர்ந்த 20 - 30 வயதுக்குட்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து கொள்ளையடித்த சில பொருட்களும் ஆபத்தை விளைவிக்கும் வகையில் இருந்த வாளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரும் அச்சுவேலி பொலிஸாரும் இணைந்து கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கடந்த டிசெம்பர் 10 ஆம் திகதி புத்தூர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு சிசிரிவி கமெரா, தொலைக்காட்சி பெட்டி, சிகரெட் பெட்டிகள், தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகள் என பல பொருட்கள் கொள்ளையிடப்பட்டதாக உரிமையாளரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. (அ)

# வெடுக்குநாறி சிவன் ஆலயத்தின் நிர்வாகத்திடம் மீளவும் விசாரணை

வவுனியா, டிசெ. 14

**வவுனியா வடக்கு, வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலய நிர்வாகத்தினர் நெடுங்கேணி பொலிஸாரால் அழைக்கப்பட்டு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.**

வவுனியா வடக்கு, ஒலுமடு, வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயம் தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப் பட்டுள்ளதுடன், குறித்த பகுதியில் புத்தர் சிலையும் வைப்பதற்கு முயற்சிகள் இடம்பெற்றிருந்ததுடன், ஆதிசிவன் ஆலய விக்கிரகங்களும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உடைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் பல்வேறு போராட்டங்கள் மற்றும் வழக்கு விசாரணைகளின் பின்னர் தொல்பொருட்களைச் சேதப்படுத்தாது வழிபாடு செய்வதற்கு வவுனியா நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பூசகர் ஆகியோரை அழைத்த நெடுங்கேணி பொலிஸார் அவர்களிடம், 2019-2020ஆம் ஆண்டு வருடாந்த திருவிழாவுக்கு அனுமதி தந்தது யார்?, 2019ஆம் ஆண்டு ஏணிப்படி அமைப்பதற்கு நிதி உதவி வழங்கியது யார்?, ஏணிப்படியினை மலைக்கு கொண்டு சென்று நிறுவியவர்கள் யார்?, 2019-2020ஆம் ஆண்டு திருவிழாவிற்கு ஒலி பெருக்கியினை பயன்படுத்த அனுமதி தந்தது யார்?, 2019ஆம் ஆண்டு ஆலயச் சூழலை அடையாளப்படுத்தும் நோக்கில் சில முக்கிய மரங்கள் தொல்பொருள் சாராத இடங்களுக்கு வெள்ளைநிற சுண்ணாம்பு பூசப்பட்டிருந்தது. அதனை செய்தது யார்? என விசாரணைகளை மேற்கொண்டு வாக்கு மூலத்தை பதிவு செய்ததாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (அ)

# கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் பட்ஜெட்டுக்கு எதிர்ப்பு!



கொழும்பு, டிசெ. 14

அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், அதிகரித்து செல்லும் வாழ்க்கை செலவுக்கு எதிராகவும் 20,000 ரூபா சம்பள அதிகரிப்பை தனியார் துறையினருக்கு வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியும் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வர்த்தக வலய தொழிலாளர்களுக்கான தேசிய மையம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் பதாதைகளையும் சுலோக அட்டைகளையும் ஏந்தி இருந்ததோடு எதிர்ப்பு கோஷங்களையும் எழுப்பினர். (அ)

# சகோதரன் பொருத்திய மின் கம்பியில் சிக்கி இளைய சகோதரன் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 14

குருநாகல் - மஹவ பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி சிறுவன் ஒருவர் உயிரிழந்தார் என மஹாவ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் குருநாகல் - அம்பன்பொல பிரதேசத்தை சேர்ந்த 4 வயதுடைய சிறுவனாவார்.

இவர் தனது சகோதரனால் யானைகளுக்காக வயலில் பொருத்தப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கியே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட குற்றத்துக்காக பெண் மற்றும் ஆண் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# மகனால் வெட்டப்பட்ட மரக்கிளை தலையில் வீழ்ந்ததில் தந்தை பலி!

கொழும்பு, டிசெ. 14

மகனால் வெட்டப்பட்ட மரத்தின் கிளை ஒன்று தலையில் வீழ்ந்ததில் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் மொனராகலை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதோடு, உயிரிழந்தவர் 75 வயதுடைய தந்தையாவார்.

இவர் வீட்டிற்கு அருகில் இருந்த பலா மரம் ஒன்றை தனது மகன்மூலமாக வெட்டிக்கொண்டிருக்கும்போது மரக்கிளை ஒன்று இவரது தலையில் வீழ்ந்ததில் பலத்த காயமடைந்தார்.

காயமடைந்தவர் மொனராகலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சிறுவர் இல்லத்திலிருந்து தப்பியோடிய 3 சிறுமிகளும் பொலிஸ் பொறுப்பில்!

கொழும்பு, டிசெ. 14

ஹிங்குராக்கொடவிலுள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் தங்கியிருந்த மூன்று சிறுமிகள் தப்பியோடிய நிலையில் அவர்கள் மூவரும் கண்டுபிடிக்கப்பட்டு தமது பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளதாக ஹிங்குராகொட பொலிஸார் தெரிவித்தனர்.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான வீடு ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்த இந்த மூன்று சிறுமிகளும் காணாமல்போனமை தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு இவர்கள் மூவரும் கண்டு பிடிக்கப்பட்டனர்.

13, 14 மற்றும் 16 வயதுடைய மூன்று சிறுமிகளே இவ்வாறு தப்பியோடியிருந்தனர். (அ)

# மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த விசேட குழு நியமனம்

கொழும்பு, டிசெ. 14

மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக துரித தீர்மானங்களை மேற்கொள்கின்ற பொறிமுறையை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைய ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் உள்ளிட்டவற்றின் உயர் அதிகாரிகளை உள்ளடக்கி விசேட குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2030 ஆம் ஆண்டாகும்போது தேசிய ரீதியில் நிச்சயிக்கப்பட்டுள்ள ஒத்துழைப்பு இலக்குகளை அடைவதற்காக மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்திக் கருத்திட்டங்களை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்திக் கருத்திட்டங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும், அத்துடன் அந்நிறுவனங்கள் குறித்த தீர்மானங்களை வினைத்திறனுடனும் விரைவாகவும் செயலாற்றுகின்றமையைக் கண்காணிக்கக் கூடிய வகையில் கீழ்க்காணும் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த நிரந்தரக் குழுவொன்றை நியமிப்பதற்காக மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி செயலக அதிகாரியொருவரை குழுத் தலைவராகவும், பிரதமர் அலுவலகம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, சுற்றுலா மற்றும் காணி அமைச்சு, கைத்தொழில் அமைச்சு, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு, நீர்ப்பாசன அமைச்சு, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு, இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபை மற்றும் இலங்கை மின்சார சபை என்பவற்றிலிருந்து ஏனைய உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

# விசாரணைக்கு அழைக்கப்பட்ட நிறுவனத்தின் அதிகாரி பொலிஸ் நிலைய குடிதண்ணீர்க்குழாயை உடைத்தார்!

கொழும்பு, டிசெ. 14

வாகன விபத்து தொடர்பில் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றவரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைகள் மேற்கொண்டபோது பொலிஸ் நிலையத்தில் தகராறு செய்தார் என்ற குற்றச்சாட்டில் குத்தகை நிறுவனம் ஒன்றின் பிரதம நிறைவேற்று அதிகாரி கைது செய்யப்பட்டதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் நிலையத்தில் காணப்பட்ட நீர்க்குழாயை சந்தேக நபர் உடைத்து சேதப்படுத்தியதால் அதிலிருந்த வெளியேறிய நீர் பொலிஸ் நிலையத்தின் சில பகுதிகளில் வெள்ளம் போன்று காட்சியளித்தன.

இந்நிலையில், சந்தேகநபர் மதுபோதையில் இருந்தாரா என பரிசோதிக்க முற்பட்டபோது, அவர் அதனை நிராகரித்ததால் பலப்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பரிசோதனை செய்ததாகவும் அங்கும் சந்தேக நபர் வைத்தியரை பரிசோதனை செய்ய அனுமதிக்கவில்லை எனவும் பொலிஸார் கூறினர்.

அம்பலாங்கொடை நெடுஞ்சாலையில் சந்தேக நபர் செலுத்திய ஜீப் காருடன் மோதி விபத்துக்குள்ளானதாகவும், விபத்தின் பின்னர் சந்தேகநபர் தனது ஜீப்பை அவரது வீடு வரை செலுத்தியதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# மீன்பிடி, அபிவிருத்தி நடவடிக்கையில் மன்னார் தொடர்ந்தும் புறக்கணிப்பு!

## மீனவர் சமாசத் தலைவர் குற்றச்சாட்டு

மன்னார், டிசெ. 14

மீன்பிடி மற்றும் இதர அபிவிருத்தி நடவடிக்கைகளில் மன்னார் மாவட்டம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் முஹமட் ஆலம் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

மன்னாரில் செயற்படாமல் இருக்கும் மீனவர் சங்கங்கள் மற்றும் அமைப்புகளை இணைத்து எவ்வாறு செயற்படுத்துவது என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் பங்குத்தந்தை மார்க்கஸ் அடிகளார் தலைமையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை காலையில் நடைபெற்ற சந்திப்பின்போது ஆலம் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மீன்பிடி நடவடிக்கைகள் மட்டுமல்ல மன்னார் மாவட்டத்தில் நடைபெறுகின்ற அபிவிருத்திச் செயல்பாடுகளிலும் மன்னார் ஓரங்கட்டப்பட்ட வருகிறது என்பதனை நாங்கள் தொடர்ச்சியாகக் கூறி வருகிறோம்.

அந்த வகையில் இன்றைய கூட்டத்தில் மாவட்ட ரீதியாக நடைபெறுகின்ற பிரச்னைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை கிராமிய அமைப்புகளை செயற்படுத்துவதற்காக புதிய நிர்வாகக் கட்டமைப்புகள் தெரிவு செய்யப்பட உள்ளன.

மேலும் மன்னார் மாவட்ட மீனவர் நலன் சார்ந்து இயங்குகின்ற பிரதிநிதிகள் மன்னார் மாவட்டத்தைச் சார்ந்தவர்களாக நிர்வாக கட்டமைப்புக்குள் இருக்கவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

அத்துடன் மாவட்டத்துக்கு வரும் எந்தவிதமான திட்டங்களாக இருந்தாலும் சரி மாவட்ட மக்களுக்கு பயன் அளிக்குமாக இருந்தால் அவற்றுக்கு நாங்கள் பூரண ஆதரவை வழங்குவோம்.

அதேபோல் மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்துக்கும் செயல்பாடுகளுக்கும் ஏதேனும் பாதகங்கள் இருந்தால் அவ்வாறான திட்டங்களுக்கு நாங்கள் தடையாக இருப்போம்-என்றார். (அ)

# மாணவிகளுக்கு தொந்தரவு செய்வோர் மீது நடவடிக்கை

## சம்மாந்துறை பொலிஸார் அறிவிப்பு

அம்பாறை, டிசெ. 14

**சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் பாடசாலை செல்லும் மாணவிகளை தொந்தரவு செய்பவர்களை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.**

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயலத்தின் ஆலோசனைக்கமைய பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி விஜயவர்த்தன தலைமையிலான விசேட பொலிஸ் குழுக்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பெண் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகள் ஆரம்பமாகும் மற்றும் முடிவடையும் நேரங்களில் இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் மாணவிகளுக்குப் பின்னால் கூட்டமாகச் சென்று தொந்தரவு செய்வதோடு, அலைபேசியில் புகைப்படம் எடுப்பதாகவும் பெற்றோர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

பெண் பாடசாலைகள் அமையப் பெற்றுள்ள பிரதேசங்களில் குறிப்பாக உள் வீதிகளில், பாடசாலை ஆரம்பிக்கும் முடியும் நேரங்களில் விசேட போக்குவரத்து பொலிஸாரை சிவில் உடையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இளைஞர்கள் போக்குவரத்து நடைமுறைகளை மீறி உள் வீதிகளில் மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர். (அ)




# சுகாதார திணைக்களத்தின் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்து

அம்பாறை, டிசெ. 14

திருக்கோவில் - பொத்துவில் பிரதான வீதியில் காஞ்சிரங்குடா என்ற இடத்தில் சுகாதாரத் திணைக்களத்திற்கு சொந்தமான கெப் வண்டியொன்று வேகக் கட்டுப்பாட்டை மீறி வீதியின் வலது பக்கமாக விலகி வீதியின் ஓரத்தில் உள்ள பயணிகள் பஸ் நிறுத்துமிடத்தில் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

கப் வாகனத்தில் பயணித்தவர்களுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டதுடன், பயணிகள் பஸ் நிலையத்தில் எவரும் இல்லாத நிலையில் எந்த விதமான உயிர் ஆபத்துக்களும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஆனைகட்டியவெளியில் மிளகாய் அறுவடை விழா

காரைதீவு, டிசெ. 14

விவசாய திணைக்களத்தினால் முன்மாதிரி துண்டச் செய்கைக்காக வழங்கப்பட்ட கலப்பின செத்தல் மிளகாய் செய்கையின் அறுவடை விழா றாணமடு விவசாய போதனாசிரியர் பிரிவுகளுக்குட்பட்ட ஆனைகட்டியவெளி கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

றாணமடு விவசாய போதனாசிரியர் பிரிவுக்கு பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே.கிலசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வீ.பேரின்பராஜா தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் எஸ். சித்திரவேல் விவசாய பயிலுனர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

மிச் ஹைபிரிட் 1 எனும் மிளகாய் வர்க்கம் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு செத்தல் மிளகாய் உற்பத்தியை ஊக்குவிக்கும் செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக இது இடம்பெற்றது.

மிளகாய் செய்கையில் ஏற்பட்ட நோய் பீடை தாக்கங்கள் பற்றியும் இதன்போது தொளிவூட்டல்கள் வழங்கப்பட்டது.



# தென்கிழக்கு பல்கலை தொழில்நுட்பவியல் பீடத்தில் 3ஆவது சர்வதேச ஆய்வரங்கு!

அம்பாறை, டிசெ. 14

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தொழிநுட்பவியல் பீடம் ஏற்பாடு செய்திருந்த 3 ஆவது சர்வதேச ஆய்வரங்கு நேற்று முன் தினம் தொழிநுட்பவியல் பீடத்தில் நிகழ்நிலையாக இடம்பெற்றது.

தொழிநுட்பவியல் பீட பீடாதிபதி கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் தலைமையில் இடம்பெற்ற இவ் ஆய்வரங்குக்குக்கு பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டார்.

நிகழ்வின்போது ஆய்வரங்கின் இணைப்பாளர் எஸ்.எல். அப்துல் ஹலிம் வரவேற்புரை நிகழ்த்தியதுடன் நிகழ்வின் பிரதான பேச்சாளர்கள் தொடர்பில் அறிமுக உரையையும் நிகழ்த்தினார்.

பிரதான பேச்சாளர்களாக மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் பேராசிரியர் ஜிஹான் டயஸ், றுஹூனு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் எமெரிட்டஸ் பேராசிரியர் காமினி சேனநாயக்க ஆகியோர் கலந்து கொண்டு



உரையாற்றினர்.

ஆய்வரங்கின் செயலாளர் கலாநிதி ஏ.என்.எம் முபாறக் நன்றியுரை நிகழ்த்தினார்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான குறித்த 3ஆவது சர்வதேச மாநாட்டில் எட்டு வித்தியாசமான தலைப்புக்களில் 76 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த கட்டுரைகள் திறனாய்வாளர்களினால் உன்னிப்பான முறையில் ஆராயப்பட்டு, அவர்களின் பரிந்துரைகளுக்குப் பின்னர் 35 ஆய்வுக் கட்டுரைகள் பிரசுரத்துக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

# மாணவிகளின் மத நல்லிணக்க களப்பயணம்!

காரைதீவு, டிசெ. 14

நிந்தவூர் அல் மஸ்ஹர் பெண்கள் கல்லூரி மாணவிகள் வரலாற்று பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலயத்துக்கு இனமத நல்லிணக்க களப்பயணம் ஒன்றை கடந்த சனிக்கிழமையன்று மேற்கொண்டிருந்தார்கள்.

கல்லூரி அதிபர் ஏ.எல்.நிஷா முடீன் தலைமையிலே மாணவிகள் ஆலயத்திற்கு சென்று பார்வையிட்டனர்.

அங்கு இஸ்லாமிய மாணவிகள் ஆலய நடைமுறைகளையும் இந்து வழிபாட்டு முறைகளையும் அறிந்துகொண்டார்கள்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் கே.ஜெயசிறிலின் வேண்டுகோளுக்கு அமைவாக ஆலய பரிபாலன சபை ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா ஆலயம் தொடர்பான வரலாற்றை அந்த மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.



கூடவே இனமத நல்லிணக்கம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

அந்த மாணவிகள் முதன் முறையாக ஒரு இந்து ஆலயத்திற்கு வருகை தந்தமையை சுட்டி காட்டினார்கள். மற்றும் அதிபர்ஆசிரியர்களும் நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த பயணம் தமக்கு திருப்தி அளித்ததாகவும் அவர்கள் கூறினார்கள். (அ)

# சுற்றுலா நீதிமன்றம் திறப்பு

திருமலை, டிசெ. 14

திருகோணமலை மாவட்டத்தில் மொரவெவ மற்றும் கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்களின் நலன் கருதி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மொரவெவயில் சுற்றுலா நீதிமன்றம் உத்தியோபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம். அப்துல்லா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை பிரதான நீதவான் மற்றும் மேலதிக நீதவான் மாவட்ட நீதிபதி உட்பட சட்டத்தரணிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)



# சர்வதேச ஆதரவை இழக்க ஆரம்பிக்கின்றது இஸ்ரேல்!

## ஜோ பைடன் எச்சரிக்கை



**நியூயோர்க், டிசெ. 14**

**இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு தனது கடுமையான அரசாங்கத்தை மாற்றவேண்டும் என்றும், எதிர்காலத்தில் பலஸ்தீன அரசை இஸ்ரேல் நிராகரிக்க முடியாது என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறினார்.**

தனது 2024 மறுதேர்தல் பிரசாரத்திற்கான நிதி திரட்டும் நிகழ்வில் பைடன் இதனை தெரிவித்தார்.

காஸாவில் இஸ்ரேல் நடத்தும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களால் ஆயிரக்கணக்கான பலஸ்தீனிய குடிமக்கள் கொல்லப்படுவதால் வளர்ந்து வரும் சர்வதேச கவலைகளை, பைடனின் நிலைப்பாடு பிரதிபலிக்கிறது.

காஸா மீதான தாக்குதலுக்கு எதிரான சர்வதேச நிலைப்பாட்டை சுட்டிக்காட்டி "அவர்கள் அந்த ஆதரவை இழக்கத் தொடங்குகிறார்கள்," என்று பைடன் கூறினார்.

பைடனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் இஸ்ரேலிய போர் அமைச்சரவையுடன் பேச்சுவார்த்தை நடத்த இஸ்ரேலுக்கு செல்ல தயாராகி வரும் நிலையில் இந்த கூர்மையான கருத்துக்கள் வந்துள்ளன.

ஹமாஸை அழித்து, பலஸ்தீனப் போராளிகளால் பிடிக்கப்பட்ட பிணைக் கைதிகளை மீட்பதற்கு இஸ்ரேல் அமெரிக்காவின் ஆதரவைப் பெறுகிறது, ஆனால் காசா போரைத் தொடர்ந்து என்ன செய்யக்கூடும் என்பதில் நட்பு நாடுகள் வேறுபடுகின்றன என்று நெத்தன்யாகு புதன்கிழமை கூறினார்.

இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு மந்திரியாக இருக்கும் இஸ்ரேலின் தீவிர வலதுசாரி அரசியல்வாதியான பென் கெவிர் பற்றி பைடன் குறிப்பாக குறிப்பிட்டு, "இது இஸ்ரேலின் வரலாற்றில் மிகவும் பழமைவாத அரசாங்கம்" என்று கூறினார்.

# இந்தியப் பாராளுமன்றத்துக்குள் கண்ணீர் புகைக்குண்டு தாக்குதல்

## எம்.பிக்கள் மத்தியில் பரபரப்பு

புதுடில்லி, டிசெ. 14

இந்திய பாராளுமன்ற மக்களவைக்குள் (லோக்சபா) நேற்று திடீரென அத்துமீறி நுழைந்த இருவரால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கடந்த 2001 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்த திட்டமிட்ட சதி முறியடிக்கப்பட்டு 22 ஆண்டுகள் நிறைவு நாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டபோதே இவ்வாறான ஒரு சம்பவம் பதிவாகியுள்ளது.

சபை நடந்து கொண்டிருந்த போது பார்வையாளர்கள் பக்கம் இருந்து திடீரெனச் கூச்சலிட்டவாறு இருவர் சபாநாயகரை நோக்கிச் சென்றதோடு இரு கண்ணீர்ப் புகை குண்டுகளையும் எறிந்துள்ளனர்.

பின்னர் , உறுப்பினர்களால் அவர்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)



# பாகிஸ்தான் குண்டு தாக்குதலில் 23 இராணுவத்தினர் உயிரிழப்பு!

## வெடிகுண்டு நிரப்பிய காரை முகாம் மீது மோதிய தீவிரவாதிகள்



இஸ்லாமாபாத், டிசெ. 14

பாகிஸ்தானில் தலிபான் ஆதரவு பெற்ற இஸ்லாமிய தீவிரவாதிகள் நடத்திய கார் வெடிகுண்டு தாக்குதலில் 23 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் இராணுவத்தின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைபர்-பக்துன்கவா மாகாணத்தின் தெற்கு வஸிரிஸ்தான் மாவட்டத்தில் தேரா இஸ்மாயில் கான் தாராபன் என்ற இடத்தில் உள்ள இராணுவ நிலைகள் மீது 6 தீவிரவாதிகள் நேற்று முன் தினம் அதிகாலையில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலை இராணுவத்தினர் முறியடித்துள்ளனர். இதனையடுத்து தீவிரவாதிகள் வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட ஒரு வாகனத்தை ஓட்டி வந்து இராணுவ முகாம் கட்டடத்தில் மீது மோதி தற்கொலை தாக்குதலை நடத்தியுள்ளனர்.

சம்பவத்தில் 6 தீவிரவாதிகளுடன் 23 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

கைபர்-பக்துன்கவா மாகாணத்தில் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட இந்த தாக்குதல் அண்மைக் காலங்களில் நடத்தப்பட்ட மிக மோசமான தாக்குதலாக கருதப்படுகிறது.

பாகிஸ்தானில் தலிபான் ஆதரவு தீவிரவாதிகள் நடத்தி வரும் வன்முறை தாக்குதல்கள் அண்மைய காலமாக அதிகரித்து வருகிறது. (அ)

# சிங்கப்பூரை மீண்டும் மிரட்டும் கொரோனா!

## ஒரு வாரத்தில் 32 ஆயிரம் பேருக்கு தொற்று

சிங்கப்பூர் சிற்றி, டிசெ. 14

சிங்கப்பூரில் கொரோனா மீண்டும் வேகமாக பரவி வருவதால் மக்கள் அனைவரும் தடுப்பூசி முகமூடிகளை அணிய வைத்தியர்கள் அறிவுறுத்தி உள்ளனர்.

கொரோனா அதிகரிப்பின் காரணமாக மீண்டும் ஊடரங்கு அறிவிக்கப்படுமோ என்ற அச்சத்தில் மக்கள் உள்ளனர்.

உலகளவில் கொரோனா தொற்று குறைவடைந்துள்ள நிலையில் சிங்கப்பூரில் கடந்த சில தினங்களாக கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது.

இதன்படி, அந்நாட்டு சுகாதார அமைச்சு கடந்த வாரம் வெளியிட்ட அறிவிப்பில், டிசெம்பர் 2ஆம் திகதி வரையான ஒருவார காலப்பகுதிக்குள் 32 ஆயிரத்து 35 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது இவ்வாண்டு பதிவான அதிகூடிய பாதிப்பாகும்.



இதற்கு முன்னர் கடந்த மார்ச் மாதம் ஒருவார காலப்பகுதிக்குள் 28 ஆயிரத்து 410 பேருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

சிங்கப்பூரில் தற்போது தீவிர சிகிச்சை தேவைப்படும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இதனையடுத்து "தடுப்பூசி செலுத்தவும், வெளியே செல்லும்போது கட்டாயம் முகமூடி அணிவது, சமூக இடைவெளியை கடைப்பிடிப்பது, உடல் நிலை பாதிக்கப்பட்டவர்கள் வெளியே செல்வதை தவிர்ப்பது, அனைவரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் கவனமுடன் இருக்க வேண்டும்" என வைத்தியர்கள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

# மேலதிக உதவிகளை எமக்கு வழங்குங்கள்

## உக்ரைன் நாட்டு ஜனாதிபதி அமெரிக்காவை வலியுறுத்தல்

வொஷிங்டன், டிசெ. 14

உக்ரைனுக்கு மேலதிக உதவிகளை வழங்குமாறு அந்நாட்டு ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலன்ஸ்கி அமெரிக்காவை வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் தலைநகர் வொஷிங்டனில் தலைவர்கள் பலரைச் சந்தித்துள்ளார்.

61 பில்லியன் டொலர் பெறுமதியான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான இறுதி முயற்சிகளை அவர் இந்த சந்திப்புகளின் போது மேற்கொள்வதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை வெள்ளை மாளிகையில் உக்ரைன் ஜனாதிபதி சந்தித்துள்ளார்.

இருப்பினும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடைய தவறான செயற்பாடுகளை காரணங்காட்டி அமெரிக்க காங்கிரஸை சமரசப்படுத்தினாலேயே இந்த உதவித் தொகையைப் பெற முடியுமென ஜனாதிபதி பைடன் கூறியுள்ளார்.



# முல்லைத்தீவு இ.போ.ச. ஊழியர்கள் காலவரையறையற்ற போராட்டம்!

## நேற்று முன்தினம் முதல் முன்னெடுப்பு

முல்லைத்தீவு, டிசெ. 14

**முல்லைத்தீவு இலங்கை போக்குவரத்துசபை சாலை ஊழியர்கள் நேற்று முன் தினம் மாலை முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.**

**முல்லைத்தீவு வழித்தடத்தில் பயணிக்கும் தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுடனான முரண்பாட்டைத் தொடர்ந்து காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸை தேராவில் பகுதியில் இடைமறித்த தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள், இ.போ.ச. சாரதி மீதும் நடத்துநர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் உரிய நேர அட்டவணையை நடைமுறைப் படுத்தப்படாமையே இந்த முரண்பாடுகளுக்கு காரணம் எனவும், எனவே தமக்கான உரிய நேரங்களை வழங்கி மக்களுக்கான சேவைகளை சரியாக வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரியே இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் இந்த கால வரையறையற்ற போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.



இதேவேளை, குறித்த இப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வவுனியா, கிளிநொச்சி, காரைநகர், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய சாலைகளில் இருந்து முல்லைத்தீவுக்கான போக்குவரத்துச் சேவை நேற்று இடம் பெறவில்லை என வடமாகாண தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும் எனவும் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் தெரிவித்தனர். (அ)

# பிரதமர் தினேஷை சந்தித்து பிரியாவிடை பெற்ற பாக்லே!

கொழும்பு, டிசெ. 14

இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே, பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்து பிரியாவிடை பெற்றதாக கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

இதன்போது இரண்டு நாடுகளுக்குமிடையிலான நெருக்கமான மற்றும் வலுவான உறவுக்கு அவர் அளித்த தொடர்ச்சியான ஆதரவுக்கு இந்திய தூதுவர் தமது நன்றியை தெரிவித்துள்ளார்.

அதே ஆதரவு தமக்கு பின்னர் பதவியேற்கும் புதிய தூதுவருக்கும் கிடைக்கும் என கோபால் பாக்லே நம்பிக்கை வெளியிட்டார்.

இந்த நிலையில், மிகவும் கடினமான காலங்களில் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்காக இந்திய தூதுவருக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன நன்றி தெரிவித்தார்.

இதேவேளை, இந்திய தூதுவர் கோபால் பாக்லே, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தையும் சந்தித்து, இந்திய-இலங்கை உறவுகளின் நாகரீக தொடர்புகள் குறித்து ஆராய்ந்ததாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

# முட்டை இறக்குமதியை தொடர்வதற்கு திட்டம்!

கொழும்பு, டிசெ. 14

சந்தையில் முட்டை விலை அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக அவற்றை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனவரி மாதத்தில் இருந்து முட்டை இறக்குமதியை நிறுத்துவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.



ஜா-எலயில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ இவ்வாறு கூறினார். (அ)

# பெறுமதி சேர் வரி பூச்சியத்திலிருந்து 18 வீதமாக அதிகரிக்கப்படவில்லை

## 43 பொருட்களுக்கு வரி விலக்களிப்பு

கொழும்பு, டிசெ. 14

பெறுமதி சேர் வரி பூச்சியத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரிக்கப்படவில்லை. 15 வீதத்திலிருந்து 18 வீதமாக அதிகரிக்கப்படுகிறது. இது தொடர்பில் போலியான செய்திகள் பகிரப்படுகின்றன. மின்சாரம், இரசாயன உரம், மருந்துகள், ஆயுர்வேத மருந்துகள், குழந்தைகளுக்கான பால்மா போன்ற 43 பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்றபோது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

எதிர்பார்த்த வருமானத்தை ஈட்ட முடியாததன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இரண்டாம் கட்டகடன் தொகையை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. அதனால் வரிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சகல நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய 15 சதவீதமாகக் காணப்பட்ட வற் வரி 3 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மின்சாரம், இரசாயன உரம், மருந்துகள், ஆயுர்வேத மருந்துகள், குழந்தைகளுக்கான பால்மா போன்ற 43 பொருட்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை. வற்



வரி தொடர்பில் போலியான தகவல்கள் பாராளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் பரப்பப்படுகின்றன.

வரவு மற்றும் செலவுக்கு இடையிலான இடைவெளியை குறைக்கும் வகையிலேயே இம்முறை வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யாவிட்டால், அரசாங்கத்தை நிர்வகித்துச் செல்ல முடியாது. யார் ஆட்சியைப் பொறுப்பேற்றாலும் இரு வாரங்களுக்கு மேல் அவர்களால் ஆட்சியைக் கொண்டு செல்லவும் முடியாது.

இந்தியா, சீனா, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் என்பவை எமக்கு கடன் சலுகைகளை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன. கடன் மறுசீரமைப்புக்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டால் எதிர்வரும் காலங்களில் வற் வரியை குறைக்க முடியும். அதற்கமைய முடிந்தளவு மக்களுக்கான சலுகைகளை வழங்க முடியும் என்று ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்-என்றார். (அ)

# எரிபொருள், நிலக்கரி கொள்வனவில் முறைகேடு இருந்தால் வழக்குகளைத் தாக்கல் செய்யுங்கள்!

## அனுரகுமாரவுக்கு காஞ்சன விஜேசேகர சவால்

கொழும்பு, டிசெ. 14

அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள் மற்றும் நிலக்கரி தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளேன். முறைகேடுகள் ஏதும் இடம்பெற்றிருக்குமாயின் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் நீதிமன்றத்தை நாடலாம். அத்துடன் எரிபொருள் மற்றும் நிலக்கரி தொடர்பில் அவர் என்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வரலாம் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் முதலீட்டு மேம்பாட்டு மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க எரிபொருள், மின்னுற்பத்தி கட்டமைப்பு தொடர்பில் குறிப்பிட்ட விடயங்கள் அடிப்படையற்றவை. புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் தொடர்பிலான திட்டங்கள் விலைமனுகோரல் இல்லாமல் முன்னெடுக்கப்படவில்லை என்று அவர் குறிப்பிடுவது அடிப்படையற்றது.

புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் தொடர்பில் பொது மக்களின் அபிலாசைகளை பெற்றுக்கொள்வதற்கு 2021.04.30ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. பொது மக்களின் அபிலாசைகளை பெற்றுக்கொள்வதற்கு விடுக்கப்பட்ட விளம்பரங்களுக்கு அமைய 665 செயற்திட்டமிடலாளர்கள் முன்னிலையாகிறார்கள். இதனை தொடர்ந்து 136 செயற்திட்டமிடலாளர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். தொழில்நுட்பக் குழுவே திட்டமிடலாளர்களை தெரிவு செய்தது. இந்த குழுவில் ஜனாதிபதியோ அமைச்சரோ அமைச்சரவை உறுப்பினர்களோ அங்கம் வகிக்கவில்லை.

அத்துடன், எரிபொருள் மற்றும் நிலக்கரி கொள்வனவு தொடர்பில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டார். நான் அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள் மற்றும் நிலக்கரி தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளேன். முறைகேடுகள் ஏதும் இடம்பெற்றிருக்குமாயின், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் நீதிமன்றத்தை நாடலாம்.

எரிபொருள் மற்றும் நிலக்கரி தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் என்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வரலாம். அவ்வாறு வந்தால் நாட்டு மக்கள் அவரது அறிவை அறிந்துகொள்வார்கள். ஊழல் மோசடி செய்தவர்கள் தொடர்பான கோப்பு தன்னிடம் உள்ளதாக குறிப்பிட்டார். ஆனால் இதுவரை ஊழல் மோசடி செய்ததாக குறிப்பிடப்படும் தரப்பினருக்கு எதிராக அவர் வழக்கு தாக்கல் செய்யவில்லை-என்றார். (அ)

# பௌத்தத்தை அவமதித்த பிக்கு கைது!

கொழும்பு, டிசெ. 14

பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் நடந்துகொண்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள விஷ்வ புத்தா என்ற பிக்குவை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கலகெடிஹேன பிரதேசத்தில் வைத்து குறித்த பிக்கு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பிக்கு இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடையவராவார்.

சந்தேகநபரான பிக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (அ)

## மருமகனின்...

உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கடந்த 9ஆம் திகதி, மரணமானவரின் வீட்டிலிருந்தவர்கள் உறவினரின் வீட்டில் இடம்பெற்ற விசேஷத்துக்காக கோண்டாவிலுக்கு சென்றுள்ளனர். மரணமானவர் தனியாக வீட்டில் இருந்துள்ளார்.

அச்சமயம், இவரின் மருமகன் (சகோதரியின் மகன்) மது போதையில் வந்து அவரைத் தாக்கியுள்ளார். இதில், காயமடைந்தவரை மீட்டு அயலவர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அன்றைய தினமே மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று புதன்கிழமை உயிரிழந்தார்.

இதேசமயம், தாக்குதல் நடத்தியவர் சில தினங்களுக்கு முன்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கைக்கு...

நிறைவடைந்த நிலையில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் தவணை கொடுப்பனவாக இலங்கைக்கு 33 கோடியே 70 இலட்சம் அமெரிக்க டொலர் வழங்கப்படவுள்ளது.

இலங்கைக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி அனுமதி வழங்கியது.

நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த கடன் வசதி வழங்கப்படுகிறது. இந்த கடன் வசதியின் முதலாவது தவணை கொடுப்பனவாக 33 கோடி அமெரிக்க டொலர் வழங்கப்பட்டது.

இரண்டாம் தவணை கொடுப்பனவுக்கு சர்வதேச நாணய நிதியம் அனுமதி வழங்கியுள்ளதால் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தை கடந்து, நிவாரண பொருளாதார வலயத்திற்குள் உள்நுழைவதற்கான இயலுமை கிடைக்கப்பெற்றுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தமது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார். (ஐ)

## வசமுள்ள...

தென்னை பயிர் செய்கை சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண தெங்கு முக்கோண வலய செயல்திட்டம் நேற்று கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்விலேயே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

வடக்கில் இராணுவம், வனவளத் திணைக்களம் மற்றும் தரிசு நிலங்கள் உள்ளடங்கலாக ஏறத்தாழ 40 ஆயிரம் ஏக்கர் காணிகள் உள்ளன. இந்தக் காணிகளை தென்னை பயிர்ச் செய்கைக் காக விடுவித்தால் 6 கோடியே 63 இலட்சம் தேங்காய்களை உற்பத்தி செய்ய முடியும். இவற்றின் மூலம், 582 கோடியே 80 இலட்சம் ரூபாயை தேசிய வருமானமாக பெறலாம்.

இந்தத் திட்டத்தின் மூலம் மக்களின் வாழ்க்கைத் திறனை மேம்படுத்த 4.6 கோடி டொலர் வெளிநாட்டு வருமானத்தை பெறமுடியும்.

தென்னை சார்ந்த சுற்றுலா மையங்களை அமைத்தல், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாத வகையில் ஒருங்கிணைந்த பண்ணைகளை அமைக்கவும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை தென்னை சார்ந்த தொழில்துறைகளை ஆரம்பிக்க ஊக்குவித்தல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் முடியும் - என்று நிகழ்வில் பேசிய அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## ரவிராஜ்...

தெரிவித்தார்.

காலனித்துவ ஆட்சியில் படுகொலை செய்யப்பட்ட எட்வர்ட் ஹென்றி பேதிரிஸ் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள மூவரடங்கிய குழுவை அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். ஹென்றி பேதிரிஸ் படுகொலை மிலேச்சத்தனமானது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் படுகொலையானவர்கள், சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க, றிச்சட் சொய்சா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், மகேஸ்வரன் படுகொலைகள் மற்றும் சாகரிகா கோமஸ், பிரேம கீர்த்தி அல்விஸ் ஆகியோர்களின் படுகொலைகள் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொண்டு உண்மை பகிரங்கப்படுத்தப்படவேண்டும்.

காலனித்துவ ஆட்சியில் படுகொலை செய்யப்பட்ட எட்வர்ட் ஹென்றி தொடர்பில் காட்டும் அக்கறை அண்மை காலத்தில் படுகொலை செய்யப்பட்டவர்கள் விவகாரத்தில் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## நிறைவேறியது...

மாத கால இடைக்கால தடை விதிக்கப்பட்ட அரச தரப்பின் டயானா கமகே மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் சுஜித் சஞ்சய பெரேரா, ரோகண பண்டார ஆகியோர் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அரச தரப்பை சேர்ந்தவரும் அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்டவருமான ரொஷான் ரணசிங்க எதிராக வாக்களித்தார்.

முன்னதாக, நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த நவம்பர் 13ஆம் திகதி வரவு - செலவு திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். 14 - 21ஆம் திகதி வரை இரண்டாம் வாசிப்பு மீதான குழுநிலை விவாதம் நடந்தது. இதைத் தொடர்ந்து நடந்த வாக்கெடுப்பில் 45 மேலதிக வாக்குகளால் இரண்டாம் வாசிப்பு நிறைவேறியது. ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 25 பேர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தனிநாட்டு...

கொழும்பு ஆங்கிலநாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே சுரேன் சுரேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நாட்டின் ஒற்றையாட்சிக்கு ஆபத்து ஏற்பட்டபோதெல்லாம் அதற்கு எதிராக பௌத்த மதகுருமார்கள் அணிதிரண்டுள்ளனர் என சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டை 2500 வருடங்களாக பௌத்த மதகுருமார் காப்பாற்றியுள்ளனர். இந்த காலத்தில் 17 படையெடுப்புகள் இடம்பெற்றன. விடுதலைப் புலிகள் பிரிவினைவாத போரில் ஈடுபட்டார்கள். அரசியல் நோக்கங்களை அடைவதற்காக அப்பாவி பொதுமக்களை கொலை செய்வதே பயங்கரவாதம் ஆகவே பயங்கரவாதத்துக்கான காரணம் நியாயப்படுத்தப்பட்டாலும் பயங்கரவாதத்தை நியாயப்படுத்த முடியாது நாங்கள் முழுமையாக பயங்கரவாதத்தை தோற்கடித்துள்ள போதிலும் விடுதலைப் புலிகளை நினைவுகூருவதற்கு மேற்குலக நாடுகள் அனுமதிக்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


நீங்கள் விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்றீர்களா என்ற சரத் வீரசேகரவின் கேள்விக்கு உலக தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேந்திரன், "நாங்கள் தனிநாட்டு கொள்கையை ஆதரிக்கவில்லை. அதற்கு ஆதரவளித்திருந்தால் நான் இங்கு வந்திருக்கமாட்டேன் - என்று கூறியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 6 இந்திய மீனவர்கள் காரைநகரில் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 14

காரைநகர் கடற்பகுதியில் வைத்து நேற்று மாலை இழுவைப் படகுடன் ஆறு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையே இந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நாகபட்டினத்தை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.



கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன் துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இன்றையதினம் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் மூலம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-03)

## ஜனாதிபதியுடன்...

இருந்தது. ஆனால், இந்த சந்திப்பு இடம்பெறவில்லை. இந்த நிலையிலேயே தமிழரசு கட்சியின் எம். ஏ. சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோர் தனியாக சந்தித்து பேசினர்.

மயிலத்தமடு மேய்ச்சல்தரை விவகாரத்தில் பண்ணையாளர்கள் தொடர் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். இது தொடர்பாகவும் பயங்கரவாத தடை சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாகவுமே தாங்கள் ஜனாதிபதியுடன் பேசியதாக சாணக்கியன் எம். பி. ஊடகங்களுக்கு தெரிவித்தார். (ஐ)

## உலகத்...

பாதுகாத்துக்கொள்ளும் அதே வேளை, தமது உதிரிகளான உலகத் தமிழர் பேரவையின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அங்கீகா ரத்தை வழங்கும் மறைமுக நடவடிக் கையில் தமிழரசு கட்சி ஈடுபட்டுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

நேற்றைய தினம் கொழுமபில் உள்ள தனது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பௌத்த தேரர்கள் உள்ளிட்ட தரப்பினருடன் நேபாளத்தில் இடம்பெற்ற பேச்சையடுத்து, கடந்த ஏப்ரல் 27 இல் கைச்சாத்திடப்பட்ட 6 அம்சங்களை உள்ளடக்கிய "இமயமலை" பிரகடனத்தைக் கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ள உலகத்தமிழர் பேரவை உறுப்பினர்கள், அதுகுறித்து இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அதுமாத்திரமன்றி இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் சந்தித்து அந்தப் பிரகடனத்துக்கு அங்கீகாரம் கோரியுள்ளனர்.

முதன்முதலாக உலகத் தமிழர் பேரவை உருவாக்கப்பட்டபோது, அது பல்வேறு அமைப்புகளையும் உள்ளடக்கிய குடை அமைப்பாகவே காணப்பட்டது. அதன்படி அந்த அமைப்பு உருவாக்கப்பட்டபோது அதில் அங்கம்வகித்த (பின்னர் அதிலிருந்து விலகிய) பல அமைப்புகள் ஒன்றிணைந்து இப்பிரகடனத்தைக் கண்டித்தும், விமர்சித்தும் அறிக்கை வெளியிட்டுள்ளன.

குறிப்பாக, உலகத்தமிழர் பேரவையானது புலம்பெயர் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாகத் தம்மைக் காண்பித்துக்கொள்வது தவறு எனவும் அந்த அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் உலகத் தமிழர் பேரவையின் ஊடகப் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் எம்மை சந்தித்து இதுகுறித்துக் கலந்துரையாடுவதற்கு அனுமதி கோரியிருந்தார். இருப்பினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மத்திய குழு அக்கோரிக்கையை அடியோடு நிராகரித்ததுடன், அதற்கான காரணங்களை தெளிவுபடுத்தி அவருக்குரிய பதிலும் அனுப்பி வைக்கப்பட்டது - என்றும் கூறினார்.

## பெண்...

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு நேற்று முன்தினம் மாற்றப்பட்டார். இந்நிலையில், சிகிச்சை பலனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

இவரின் மரணத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் அவரின் உடல்கூறு மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ஐ-03)

## குறுகிய...

தெரிவித்தார்.

மேலும், "பாராளுமன்றத்தில் தற்போது வீரவசனம் பேசுபவர்கள் எவரும் கடந்த ஆண்டு நாட்டை பொறுப்பேற்கவில்லை. நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்கினார்கள். உண்மையை மக்கள் அறிவார்கள். தாய் நாட்டை பாதுகாத்துள்ளேன்.

"பொருளாதார மீட்சிக்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களை குறுகிய அரசியல் நோக்கத்துக்காக மறுசீரமைத்தால் நாடு மீண்டும் வங்குரோத்து நிலையை அடையும். அவ்வாறான நிலை ஏற்பட்டால் எவரும் ஒத்துழைப்பு வழங்க முன் வரமாட்டார்கள்.

"20 ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு கோரி போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் நாட்டின் எதிர்காலத்தை சீரழிக்கிறார்கள். இது கவலைக்குரியது. நெருக்கடியான சூழ்நிலையில் ஒரு தரப்பினருக்கு சம்பளத்தை அதிகரித்தால் பெரும்பாலானவர்கள் பாதிக்கப்படுவார்கள்", என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## உறுதியான...

என நம்பகத் தன்மை மிக்க குற்றச்சாட்டுகளை எதிர் கொண்டுள்ளவர்களுக்கு எதிராக தடை களை விதிப்பதற்காக பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சு ஆதாரங்களை ஆராய்கின்றது என சபைக்கு உறுதி செய்யுங்கள்", என்று கூறினார்.

அவருக்கு, இராஜாங்க அமைச்சர் டிரெவெல்யன் பின்வருமாறு பதில ளித்தார்.

"நம்பகத்தன்மை மிக்க உள்நாட்டு பொறுப்புக்கூறல் செயன்முறை குறித்த இலங்கை மக்களின் மற்றும் பாதிக்கப்பட்ட குழுக்களின் கரிசனையை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இந்த கரிசனைகளுக்கு தீர்வு காணுமாறு நாங்கள் இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்து வலியுறுத்துகின்றோம். நான் அங்கு பயணம் சென்றிருந்த வேளை இது குறித்த கரிசனையை எழுப்பினேன். மனித உரிமைகள் குறித்தும் நீதி விடயங்கள் குறித்தும் சிவில் சமூகத்தின் உறுப்பினர்களிடம் பேச்சுகளை மேற்கொண்டேன்" - என்றார்.

ஈழநாடு
Eelanadu

# ஈழத்தமிழருக்கும் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வுக்கும் ஆதரவு!

## அமெ.காங்கிரஸ் உறுப்பினர் டொன்டேவிஸ்

நியூயோர்க், டிசெ. 14



ஈழத்தமிழர்களுக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ள அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டொன்டேவிஸ், சுய நிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வுக்கு ஆதரவு வெளியிட்டுள்ளார்.

இனப்படுகொலைக்கு எதிராக உரையாற்றிய அவர், அமெரிக்க காங்கிரஸில் உள்ள தனது சகாக்கள் தமிழ் மக்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகள் தொடர்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கு தீர்வை காணமுயலவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழ் மக்களின் பிராந்தியத்தில் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாக கொண்ட தீர்வுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

நான் தமிழ் மக்களுக்கு ஆதரவாகயிருப்பேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

1948 இல் பிரிட்டிஸ் ஆட்சியாளர்கள் வெளியேறிய பிறகு சிங்களவர்கள் ஆதிக்கம் செலுத்தும் இலங்கையின் கீழ் இந்த சாம்ராச்சியங்கள் ஒன்றிணைக்கப்பட்டமை தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்தது என டொன் டேவிஸ் தெரிவித்தார்.

இந்த செயற்பாடு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அலட்சியம் செய்தது எனவும் அவர் கூறினார்.

தமிழர்களுக்கு எதிரான அரசாங்கத்தின் அனுசரனையுடனான பாரபட்சமும் வன்முறையும் 30 வருட மோதல்களுக்கு வித்திட்டது. 2009 தமிழ் இனப்படுகொலைக்கு காரணமாக அமைந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சமீபத்தில் தமிழர்கள் கைதுசெய்யப்பட்டதை கண்டித்த அவர், இது ஆழ்ந்த கவலையளிக்கின்றது எனவும் குறிப்பிட்டார்.

இந்தோ பசுபிக்கின் இந்த முக்கியமான பகுதியில் ஸ்திரதன்மை மற்றும் அமைதியை உறுதி செய்யும் நிரந்தரமான தீர்வொன்றுக்கு நாங்கள் ஆதரவளிக்கவேண்டும் எனவும் அவர் கூறினார். (அ)

# தெற்கு அதிவேக வீதியில் வெள்ளம்

கொழும்பு, டிசெ. 14

நிலவும் சீரற்ற காலநிலையை அடுத்து ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக தெற்கு அதிவேக வீதியில் பயணிக்கும் சிறிய ரக வாகனங்கள் கொக்மாதுவ பகுதியில் வெளியேற முடியாத நிலைமை காணப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பில் இருந்து செல்லும் வாகனங்கள் பாலட்டுவ பகுதியில் வெளியேற முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் மத்தளையில் இருந்து பயணிக்கும் வாகனங்கள் கொடகம பகுதியில் வெளியேற முடியும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# ஆறு மில்லியன் முட்டைகள் 2 நாள்களில் விநியோகிக்கப்படும்!

கொழும்பு, டிசெ. 14

இறக்குமதி செய்யப்பட்டு, களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள 6 மில்லியன் முட்டைகள் நேற்றும் இன்றும் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக அரச வணிகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சதொச விற்பனை நிலையங்களினூடாக அவை விற்பனை செய்யப்படவுள்ளதாக அந்த கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார்.

சந்தையில் முட்டையின் விலை அதிகரித்துள்ளதால் அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் துறைசார் அமைச்சரின் ஆலோசனையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ)

# அடுத்த பட்ஜெட்டை ஹர்ஷ சமர்ப்பிப்பார்!

## சஜித் பிரேமதாஸ சபையில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 14

**அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் வரவு-செலவுத் திட்டம் மீதான பாராளுமன்ற விவாதம் நேற்று இடம்பெற்றது.

இதில் அடுத்த வரவு-செலவுத் திட்டத்தை யார் முன்வைப்பது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுர திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிக்கையில், ஐக்கிய



மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, அதனை முன்வைப்பர். அதில் எனது கொள்கையை வெளிப்படுத்துவார்-என்றார். (அ)

# இலங்கை மக்களின் ஜனநாயக, பொருளாதார அபிலாஷைகளுக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு!

## சர்வதேசத் தொடர்புகள் குழு யோசனை முன்வைப்பு

நியூயோர்க், டிசெ. 14

இலங்கை மக்களின் அமைதியான ஜனநாயக, பொருளாதார அபிலாஷைகளுக்கு அமெரிக்காவின் ஒத்துழைப்பை தெரிவிக்கும் யோசனையொன்று, அந்நாட்டின் சர்வதேசத் தொடர்புகள் பற்றிய குழுவில் முன்வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க செனட் சபை உறுப்பினரான பென் காடின், செனட் சபையின் சர்வதேசத் தொடர்புகள் பற்றிய குழுவின் தலைவரும் தரப்படுத்தல் உறுப்பினருமான ஜிம் ரீஷ், அதன் பிரதிநிதியான ராஜா கிருஷ்ண மூர்த்தி மற்றும் பில் ஜோன்சன் ஆகியோர் இந்த யோசனையை முன்வைத்துள்ளனர்.

ஊழலுக்கு தீர்வு காணவும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவும் சுதந்திரமான மற்றும் நியாயமான உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை தொடர்ந்தும் தாமதிக்காது நடத்துவதன் மூலம் இலங்கை மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு செவிசாய்க்கவும் அதற்கு மதிப்பளிக்கவும் இந்த தீர்மானம் இலங்கை




அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இலங்கை மக்கள், பேரழிவு மிக்க மனித உரிமைகள் சார் அழுத்தத்தை ஏற்படுத்திய அரசியல், பொருளாதார மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளதாக ஏற்றுக்கொண்டுள்ள இந்தத் தீர்மானம், அரசாங்கத்தின் ஊழல், நிதி முறைகேடு, சட்டவாட்சியின் தோல்வி மற்றும் சீன மக்கள் குடியரசு மற்றும் அதனுடன் தொடர்புடைய கொள்ளையடிக்கும் கடனுதவி ஆகிய காரணிகளினால் நெருக்கடி மோசமடைந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டால் அனுரகுமாரவே வெற்றி பெறுவார்!

## சுனில் ஹந்துன்நெத்தி கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 14

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டால், அந்த தேர்தலில் அனுரகுமார திஸாநாயக்க வெற்றி பெறுவார் என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

சிங்கள தொலைக்காட்சி ஒன்றில் ஒளிப்பரப்பான பேட்டியில் நிகழ்ச்சியில் அவர் இதனை கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கடந்த பொதுத் தேர்தலில் 3 சத வீத வாக்கு களை பெற்றது.

அந்த வாக்கு வீதமானது தற்போது ஜனாதிபதியை தெரிவு செய்யும் அளவுக்கு அதிகரித்துள்ளது.

பொதுத் தேர்தல் நடத்தப்பட்டாலும் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றும் எனவும் சுனில் ஹந்துன்நெத்தி குறிப்பிட்டார். (அ)

# மன்னார் இறங்குதுறை அபிவிருத்திக்கு முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பம்

கொழும்பு, டிசெ. 14

மன்னார் இறங்குதுறையை அபிவிருத்தி செய்வதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கு தீர்மானித்துள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

மன்னார் மற்றும் இராமேஸ்வரத்திற்கு இடையில் பயணிகள் மற்றும் சரக்கு கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு இந்த இறங்குதுறை விரைவாக அபிவிருத்தி செய்யப்படும் என அமைச்சின் செயலாளர் கே.டீ.எஸ்.ருவன்சந்திர குறிப்பிட்டார்.

அண்மையில் மன்னார் இறங்குதுறையை சூழவுள்ள பகுதியை துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டது.

முதலீட்டாளர்களினால் முன்வைக்கப்படும் முன்மொழிவுகளை கவனத்திற்கொண்டு பொருத்தமான முன்மொ ழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான அறிக்கையொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்: இங்கிலாந்து அணி அறிவிப்பு!

லண்டன், டிசெ. 14

இந்தியாவுக்கு எதிரான 5 டெஸ்ட் தொடருக்கு 16 பேர்கொண்ட இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் அறிமுக வீரர்களாக 3 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி எதிர்வரும் ஜனவரியில் இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செல்கிறது. இதன்போது, 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இந்தத் தொடரின் முதல் போட்டி ஜனவரி 25ஆம் திகதி ஹைதராபாத்தில் தொடங்குகிறது. இந்நிலையில் இந்த தொடருக்கான 16 பேர் கொண்ட இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அறிமுக வீரர்களாக சொஹைப் பஷீர், ரொம் ஹார்ட்லி, கஸ் அட்கின்சன் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் ரொம் ஹார்ட்லி, சொஹைப் பஷீர் ஆகியோர் சுழற்பந்து வீச்சாளர்கள். இவர்களுடன் ஜாக் லீச், ரெஹான் அகமது ஆகியோரும் சுழல்பந்து வீச்சாளர்களாக இடம் பெற்றுள்ளனர்.

அணி விவரம்: பென் ஸ்ரோக்ஸ் (கப்டன்), ரெஹான் அகமது, ஜேம்ஸ் அண்டர்சன், கஸ் அட்கின்சன், ஜொன்னி பெயர்ஸ்ரோ, சொஹைப் பஷீர், ஹாரிபுரூக், ஸாக் கிராவ்லி, பென் டக்கெட், பென் போக்ஸ், ரொம் ஹார்ட்லி, ஜாக் லீச், ஒல்லி போப், ஒல்லி ராபின்சன், ஜோ ரூட், மார்க் வூட். (ஐ)

## சிம்பாவே அணிக்கு எதிரான தொடரை வென்றது அயர்லாந்து



ஹராரே, டிசெ. 14

சிம்பாப்வே அணிக்கு எதிரான கடைசி மற்றும் 3ஆவது இருபது 20 கிரிக்கெட் போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணி 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரை 2-1 என கைப்பற்றி கோப்பையை வென்றது.

ஹராரேயில் நடைபெற்ற 3ஆவது ரி- 20 ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 140 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக ரியான் பர்ல் 36, பிரையன் பென்னெட் 27, கிளைவ் மதன்டே 27, வெஸ்லி மாதேவேரே 14 ஓட்டங்கள் சேர்த்தனர்.

அயர்லாந்து அணி சார்பில் ஜோஷ் லிட்டில், கரேத் டெலானி, கிரெய்க் யங் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

141 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து 18.4 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 141 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக ஹாரி டெக்டர் 45 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 54 ஓட்டங்களும் ஜார்ஜ் டாக்ரெல் 32 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 49 ஓட்டங்களும் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தனர். முன்னதாக ஆண்டி பில்பிர்னி 13, போல் ஸ்டிர்லிங் 6, லார்கன் டக்கர் 8, கர்திஸ் கேம்பர் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணி 3 போட்டிகள் கொண்ட ரி- 20 கிரிக்கெட் தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி கிண்ணத்தை வென்றது. முதல் போட்டியில் சிம்பாப்வே ஒரு விக்கெட் வித்தியாசத்திலும், 2ஆவது போட்டியில் அயர்லாந்து 4 விக்கெட்கள் வித்தியாசத்திலும் வெற்றி கண்டிருந்தன.

# இந்தியாவுடனான ரி - 20; தென்னாபிரிக்கா வெற்றி!

கேபர்ஹா, டிசெ. 14

இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது இருபது - 20 போட்டியில் வெற்றி பெற்றுள்ளது தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி.

இந்த வெற்றியின் மூலம் தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ளது தென்னாபிரிக்கா. முதல் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

போட்டியின் ஆரம்பத்தில் மழை குறுக்கிட்டது. இதன் காரணமாக டி. எல். எஸ். முறையில் 15 ஓவர்களில் 152 ஓட்டங்கள் எடுத்தால் தென்னாபிரிக்க வெற்றி பெறும் என அறிவிக்கப்பட்டது. அதற்கு ஏற்ப தொடக்கம் முதலே ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டனர் தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரர்கள். அதிகபட்சமாக ஹென்றிக்ஸ் 49 ஓட்டங்கள் மற்றும் அணித்தலைவர் மார்க்ரம் 30 ஓட்டங்கள் எடுத்திருந்தனர். 13.5 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 154 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது தென்னாபிரிக்கா.

முன்னதாக, இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் யஷஸ்வி ஜெய்ஸ்வால் மற்றும் ஷுப்மன் கில், ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர். பின்னர் திலக் வர்மா மற்றும் கப்டன் சூர்யகுமார் யாதவ் இணைந்து சிறிய இணைப்பாட்டத்தை அமைத்தனர். திலக் வர்மா, 20 பந்துகளில் 29 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.



4ஆவது விக்கெட்டுக்கு சூர்யகுமார் மற்றும் ரிங்கு சிங் இணைந்து 70 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர். சூர்யகுமார் 36 பந்துகளில் 56 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். சர்வதேச ரி-20 கிரிக்கெட்டில் 2000 ஓட்டங்களை அவர் கடந்துள்ளார். ஜிதேஷ் சர்மா ஓர் ஓட்டம், ஜடேஜா 19 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

மறுமுனையில் சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் தனது முதல் அரைச்சதத்தை பதிவு செய்தார் ரிங்கு சிங். 19.3 ஓவர்களில் இந்திய அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 180 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ரிங்கு சிங் 39 பந்துகளில் 68 ஓட்டங்கள் எடுத்திருந்தார். அப்போது மழை குறுக்கிட்ட காரணத்தால் ஆட்டம் தடைபட்டது.

அப்போது ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தும் வாய்ப்பில் இருந்தார் தென்னாபிரிக்க வீரர் ஜெரால்ட் கோட்ஸி. அந்த சூழலில் முதல் போட்டி முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

## 73 ஆயிரம் கோடி ரூபாய் தொட்ட இந்திய கிரிக்கெட்டின் மதிப்பு!

புதுடில்லி, டிசெ. 14

சர்வதேச கிரிக்கெட் சபையின் பெரும்பான்மை வருமானம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கே (பி. சி. சி. ஐ.) கிடைக்கிறது.

இந்நிலையில், பி. சி. சி. ஐயின் நிகர மதிப்பு 225 கோடி டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 73 ஆயி ரத்து 650 கோடி இலங்கை ரூபாய் என தகவல்கள் வெளி யாகியுள்ளது.

இந்தியாவுக்கு அடுத்த நிலையில், இரண்டாவது இடம் பிடித்துள்ள கிரிக்கெட் அவுஸ்திரேலியா (Cricket Australia) அமைப்பு 7.9 கோடி டொலர் - 2 ஆயிரத்து 585 கோடி இலங்கை ரூபாய் மட்டுமே ஈட்டுகிறது. சமீபத்தில் இந்தியாவில் நடந்து முடிந்த நான்காண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ஐ. சி. சி ஆண்கள் கிரிக்கெட் உலக கோப்பை தொடர் 2023 விளையாட்டு தொடரில் இறுதி போட்டியில் இந்தியாவை வீழ்த்தி அவுஸ்திரேலியா கோப்பையை வென்றது குறிப்பிடத்தக்கது. ஆனால் வருமான அடிப்படையில், பி. சி. சி. ஐ., அவுஸ்திரேலிய கிரிக்கெட் டை விட 28 மடங்கு அதிக நிகர மதிப்பு கொண்டுள்ளது.

கிரிக்கெட் விளையாட்டுக்கு மட்டுமே இந்திய ரசிகர்கள் தரும் அதிக வரவேற்பினால், பிற நாடுகளும் இந்திய அணியினர் தங்கள் நாட்டுக்கு வந்து விளையாடுவதையும் அதன் மூலம் வரும் விளம்பர வருவாயையும் பெரிதும் விரும்புகின்றனர்.

2008ல் தொடங்கப்பட்ட ஐ. பி. எல். எனப்படும் இந்திய பிரீமியர் லீக் விளையாட்டு தொடருக்கு பிறகு பி. சி. சி.ஐக்கு கிடைத்து வரும் வருமானம் ஆண்டு தோறும் மென்மேலும் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## ஐ. பி. எல். மினி ஏலத்தில் 333 வீரர்கள் இடம்பிடிப்பு




மும்பை, டிசெ. 14

17ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2024) மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் நடை பெறுகிறது. இதையொட்டி வீரர்களின் மினி ஏலம் வருகிற 19ஆம் திகதி டுபாயில் நடக்கிறது. ஏலப்பட்டி யலில் 214 இந்தியர்கள், 119 வெளிநாட்டவர் என்று மொத்தம் 333 பேர் இடம் பிடித்திருக்கின்றனர் என்று ஐ. பி. எல். நிர்வாகம் அறிவித்துள்ளது.

இவர்களில் 116 வீரர்கள் சர்வதேச போட்டியில் விளையாடிய அனுபவம் கொண்டவர்கள். ஏலத்தில் 30 வெளிநாட்டவர் உள்பட மொத்தம் 77 வீரர்கள் 10 அணிகளுக்காக எடுக்கப்பட உள்ளனர். வீரர்களை வாங்க அதிகபட்சமாக குஜராத் ரைட்டன்ஸ் அணி ரூ. 38 கோடியே 15 இலட்சத்தை கையிருப்பாக வைத்துள்ளது. நடப்பு சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸிடம் ரூ. 31.4 கோடி இருப்புத்தொகை உள்ளது.

இந்த ஏலத்தில் 23 வீரர்களின் அடிப்படை விலை அதிகபட்சம் ரூ. 2 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில் உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் சதம் விளாசிய டிராவிஸ் ஹெட், ஸ்ரீவன் ஸ்மித், பட் கம்மின்ஸ், ஹசில்வூட், மிட்செல் ஸ்ரார்க் (அவுஸ்திரேலியா), ஹரி புரூக் (இங்கிலாந்து), ஜெரால்ட் கோட்ஜீ (தென்னாபிரிக்கா), முஜீப் ரகுமான் (ஆப்கானிஸ்தான்) உள்ளிட்டோர் முக்கியமானவர்கள்.

### கிங் கிண்ண உதைபந்தாட்டம்

# ரொனால்டோவின் அல் நசீர் அணி அரையிறுதிக்கு முன்னேற்றம்!

ரியாத், டிசெ. 14

கிங் கிண்ண உதைபந்தாட்ட தொடர் சவூதி அரேபியாவில் நடைபெற்று வருகிறது. இதில் அண்மையில் நடைபெற்ற காலிறுதி போட்டியில் ரொனால்டோ தலைமையிலான அல் நசீர் அணி, அல் ஷபாப் அணியுடன் மோதியது.

இதில், தொடக்கம் முதலே முன்னிலை பெற்ற அல் நசீர் 5-2 என்ற கோல் கணக்கில் அல் ஷபாப் அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

அல் நசீர் அணி தரப்பில் ரொனால்டோ, சாடியோ மேனி, அப்துல்ரஹ்மான் கரீப், முகமது மாறன் மற்றும் செகோ போபனா ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். அல் ஷபாப் அணி தரப்பில் கார்லோஸ் மற்றும் ஹட்டன் பஹேப்ரி ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

ரொனால்டோ இந்த போட்டியில் அடித்த கோல் நடப்பு ஆண்டில் அவரது 50ஆவது கோலாக பதிவாகி உள்ளது. (ஐ)



# போலந்தில் மாற்றம் பெறும் புதிய அரசு ஐரோப்பிய நிதியை மீண்டும் பெறுமா ?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**






**போ**லந்தின் புதிய பிரதமராக ஐரோப்பிய ஒன்றிய சார்பு தலைவர் டொனால்ட் டஸ்க் ஆட்சிக்கு வருகிறார்.

இரண்டாம் உலகப்போரில் கிட்டத்தட்ட முற்று முழுதாக தரைமட்டமாக அழிக்கப்பட்டு, தன் சாம்பலிலிருந்து மீண்டு வந்த ஐரோப்பாவின் ஃபீனிக்ஸ் பறவை நாடு போலந்து என அழைக்கப்படும். ஆயினும் நீண்ட கால சோசலிச ஆட்சி 1990களில் முடிவுற்றது.

**டொனால்ட் டஸ்கின் கூட்டணி அரசு:**

1990களில் சோசலிச வீழ்ச்சியின் பின்னர், ஜனநாயக வாக்கெடுப்பு நடைமுறையில் உள்ள போலந்தில் **PiS** (சட்டம் மற்றும் நீதிக்கட்சி- **Law and Justice Party**) கட்சியின் டொனால்ட் டஸ்கின் கூட்டணி அரசாங்கம் இந்த வாரத்தில் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



முன்னாள் பிரதம மந்திரி மத்தேயேஸ் மரோவோஷ்கி தனது அமைச்சரவையின் பிரதிநிதிகள் நம்பிக்கை வாக்கெடுப்பின் முடிவின் பின் அவர் போதுமான ஆதரவைப் பெறத் தவறினால், டொனால்ட் டஸ்க் தலைமையிலான கூட்டணி அரசாங்கத்திற்கு நாடாளுமன்றம் முழுமையான ஒப்புதல் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போலந்தில் அக்டோபர் நடுப்பகுதியில் நடந்த தேர்தலில் 70 வீதத்திற்கும் அதிகமான வாக்குகள் பதிவு செய்யப்பட்டது. போலந்தில் அக்டோபரில் நடத்தப்பட்ட இரண்டாவது கருத்துக்கணிப்பு தேர்தலில் வலது சாரி ஜனரஞ்சக சட்டம் மற்றும் நீதிக்கட்சி அதிக வாக்குகளைப் பெற்றது.

இதற்கு முன்பாக ஜனரஞ்சக கட்சியின் எட்டு ஆண்டுகள் போலந்தில் இயங்கிய ஆட்சிக் காலம் தற்போது நிறைவடைகிறது. இதனை முன்னிட்டு

பிரதமர் மத்தேயேஸ் மரோவோஷ்கி 28 நவம்பர் 2023 அன்று போலந்து பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தினார்.

தேர்தலில் மற்ற எந்தக் கட்சியையும் விட **PiS** அதிக வாக்குகளைப் பெற்றது, இது அரசாங்கத்தை அமைப்பதில் முதல் தெரிவை பெற்றுள்ளது. டொனால்ட் டஸ்க் மற்றும் அவரது கூட்டணி பங்காளிகள் அமைப்பின் சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்கு முன்னுரிமை அளிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

ஆயினும் எதிர்பார்க்கப்படும் அதிகாரப்பூர்வ முடிவில், இரண்டாவது கருத்துக் கணிப்பை உறுதிப்படுத்தினால் மட்டுமே டொனால்ட் டஸ்க் மற்றும் அவரது கூட்டணி பங்காளிகள் ஆட்சியேற முடியும் என முதலில் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்கால ஜனாதிபதி ஆண்ட்ரெஜ் டுடா, அரசாங்கத்தை அமைப்பதற்கு புதிய பிரதமரை நியமிக்க வேண்டும்.

அரசாங்கத்தை அமைப்பதில் யார் முதலில் தெரிவாகுவார்கள் என்பதில் இரு மாதமாக இழுபறி நிகழ்ந்தது.

எவ்வாறாயினும், சட்டம் மற்றும் நீதிக் கட்சிக்கு பெரும்பான்மையுடன் அரசாங்கத்தை அமைப்பதற்கான தெளிவான பாதை வழி தோன்றி உள்ளது. அதே நேரத்தில் மக்கள் கூட்டணி, மற்றும் இடதுசாரிகளின் மாறுபட்ட எதிர்க் கட்சி கூட்டணி அரசாங்கத்தை அமைக்க முடியாது என்று தோன்றுகிறது.




**தற்போது போலந்தின் புதிய பிரதமராக ஐரோப்பிய ஒன்றிய சார்பு தலைவர் டொனால்ட் டஸ்க் (Donald Tusk) ஆட்சிக்கு வருவதன் மூலம் நிறுத்தப்பட்ட ஐரோப்பிய நிதியை மீண்டும் பெறும் சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளது.**

இறுதிக் கருத்துக்கணிப்பின்படி, சட்டம் மற்றும் நீதிக் கட்சி 198 இடங்களை வெல்லும், பெரும்பான்மைக்கு தேவையான 231 இடங்களை விட மிகக் குறைவாயுனும் கூட்டணி ஆட்சியை டொனால்ட் டஸ்க் தலைமையில் ஆட்சியேற முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

**ஐரோப்பிய நிதி மீண்டும் ?**

போலந்தின் நீதிமன்றங்களை அரசியலாக்குவது குறித்த சர்ச்சையின் காரணமாக, கோவிட் மீட்பு நிதியில் ஐரோப்பிய ஒன்றியம் இன்னும் 30 பில்லியன் யூரோக்களை வழங்காமல் நிறுத்தி வைத்துள்ளது.

போலந்து, ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்ததன் மூலம் பெரியளவு நன்மைகளை அனுபவித்த முக்கியமான ஒரு கிழக்கு ஐரோப்பிய நாடாகும். ஐரோப்பாவின் விரைவாக வளர்ந்து வரும் நாடுகளின் பட்டியலில் சமீபத்தில் இணைந்து, சர்வதேச நாணய நிதியத்தின் வரையறையின்படி, 0.880 மனித வளர்ச்சிக் குறியீட்டுடன் உயர் வளர்ச்சியடையும் பொருளாதாரங்களில் ஒன்றாக போலந்து கருதப்பட்டது.

2004 - 2020 வரையில் பதிவுசெய்யப்பட்ட உலகளாவிய ஏற்றுமதியில் பொருள்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியில் போலந்தின் பங்கு முழு ஐரோப்பிய ஒன்றியத்திலும் மிக அதிகமாக இருந்தது. குறிப்பாக மோட்டார் வாகனங்கள், உணவு, நுகர்வோர் பொருள்கள், ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருள்கள் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன.



அதேபோல, சமீபத்திய ஆண்டுகளில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையின் முக்கியத்துவமும் வளர்ந்துள்ளதால் போலந்த்தின் தொழில்நுட்பத் துறை அதிக ஆற்றலைக் கொண்டுள்ளது.

வணிக நடவடிக்கைகளை பல்வகைப்படுத்தவும், விநியோகச் சங்கிலி செலவுகளைக் குறைக்கவும் பல சர்வதேச நிறுவனங்கள் ஆசியாவிலிருந்த தமது உற்பத்தி ஆலைகளை போலந்துக்கு இடமாற்றம் செய்யத் தொடங்கியுள்ளன.

**கோவிட் தொற்று பரவலின் பின்:**

கோவிட் தொற்று பரவலின் பின் ஆசிய உற்பத்தி ஆலைகள் மற்றும் ஐரோப்பியச் சந்தைகளுக்கு இடையிலான விநியோகச் சங்கிலிகள் சீர்குலையும் நிலையில், குறைந்த விலையில் அதிக திறனுள்ள ஊழியர்கள் கிடைப்பதால், பல நிறுவனங்கள் போலந்தின் மீது அதிகளவில் கவனம் செலுத்தின.

ஐரோப்பாவில் மைய இடம், வலுவான, வளரும் பொருளாதாரம், ஒரு உறுதியான தொழிலாளர் சந்தை மற்றும் மாநில உதவி உத்திகள் ஆகியவற்றின் கலவையானது போலந்தின் உற்பத்தித் துறையில் ஐரோப்பிய, ஆசிய மற்றும் அமெரிக்க முதலீட்டை ஈர்த்தது.

பிரெக்ஸிட்டுக்கு அடுத்தபடியாக பரபரப்பாகப் பேசப்பட்ட ஒரு விஷயம் போலெக்ஸிட் (**POLEXIT**) ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு போலந்து வெளியேறப் போகிறது என்று எழுந்த பரபரப்பான விவாதம் தற்போது அடங்கியுள்ளது.

போலந்து உச்ச நீதிமன்ற நீதிபதியின் நியமனத்தோடு இந்த விஷயம் சூடு பிடித்தது. உச்ச நீதிமன்ற நீதிபதி நியமனத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் விதிகளை போலந்து உதாசீனப்படுத்தி விட்டதாக ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவித்தது.

இதன் பின்னணியில் பல அரசியல் உள்நோக்கங்களும், பிராந்திய நலன்கள் மறைந்திருந்தாலும் போலந்து பகிரங்கமாக வைத்த முதல் குற்றச்சாட்டு ஐரோப்பிய ஒன்றியம் தமது கொள்கைகளை எல்லாவிதத்திலும் தம்மீது திணிக்கின்றது என்பதே.

கத்தோலிக்க நாடான போலந்து கருக்கலைப்பு, டுபுடீவு உறவு போன்ற பல விஷயங்களுக்கு எதிரான சட்டங்களை உறுதியாகக் கொண்டுள்ளது. ஆனால் ஐரோப்பிய ஒன்றியம், இதுபோன்ற விஷயங்களில் மிகவும் திறந்த கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

தற்போது போலந்தின் புதிய பிரதமராக ஐரோப்பிய ஒன்றிய சார்பு தலைவர் டஸ்க் ஆட்சிக்கு வருவதன் மூலம் நிறுத்தப்பட்ட ஐரோப்பிய நிதியை மீண்டும் பெறும் சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளது. ●

# அரபு நாடுகள் அமெரிக்கா மீது கோபம்: ரஷ்யாவுடன் நெருக்கம்!

## மத்திய கிழக்கில் என்ன நடக்கிறது?






காஸாவில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதில் அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்து அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளின் கோபம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் சட்டப்பிரிவு 99 ஐ நடைமுறைப்படுத்திய பின்னர் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அவசர கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சட்டப்பிரிவு 99 அமுல்படுத்தப்பட்ட பின்னர், காஸாவில் இஸ்ரேலிய ராணுவ நடவடிக்கையை நிறுத்த பாதுகாப்பு கவுன்சில் வாக்களிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் போர் நிறுத்தத்தை முன்மொழிந்து. அதன் மீது வாக்கெடுப்பு நடந்தது. பாதுகாப்பு கவுன்சிலின் 13 உறுப்பினர்கள் இந்த முன்மொழிவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். ஆனால் அமெரிக்கா அதை வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி ரத்து செய்தது.

பிரிட்டன் இந்த வாக்கெடுப்பில் இருந்து விலகி இருந்தது. ஆனால் அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியதால் அது எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்காது.

வீட்டோ அதிகரத்தை பயன்படுத்தியதற்கு ஆதரவாக வாதிட்ட ஐ.நா.வுக்கான அமெரிக்க துணை தூதர் ராபர்ட் ஆர். வூட், ”போர் நிறுத்த தீர்மானத்தில் பயன்படுத்தப்பட்ட மொழி அக்டோபர் 7 அன்று இஸ்ரேலுக்குள் ஹமாஸ் தாக்குதலை கண்டிக்கவில்லை” என்றார். குறிப்பாக, இஸ்ரேலிய குடிமக்களுக்கு எதிரான பாலியல் வன்முறை பற்றிய அறிக்கைகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும், இஸ்ரேலுக்கு தற்காப்பு உரிமை உண்டு என்பதையும் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று அவர் வாதிட்டார்.

### அமெரிக்கா மீது அரபு நாடுகள் கோபம்

1950 களில் இருந்து, அரபு நாடுகளும் ஈரானும், சர்ச்சைக்குரிய பாலத்தீனப் பகுதியில் ராணுவ மற்றும் மனிதாபிமான பிரச்னைகள் வெடித்ததால், மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக எண்ணெய் வளத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவது பற்றி விவாதித்து வருகின்றன.

இரண்டு முறை எண்ணெய் விநியோகமும் நிறுத்தப்பட்டுள்ளது. முதலில் 1967 இல் ஆறு நாள் போரின் போதும், பின்னர் 1973 இல் யோம் கிப்பர் போரின் போதும் எண்ணெய் வினியோகம் நிறுத்தப்பட்டது. முதல் தடை பலனளிக்கவில்லை, ஆனால் இரண்டாவது தடை ஆழமான விளைவுகளை ஏற்படுத்தியது.

மேற்கத்திய நாடுகளும் அரபு நாடுகளும் இச்சம்பவங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டன. எனவே, இப்போது யாரும் எண்ணெய் விநியோகத்தை நிறுத்துவது பற்றிப் பேசுவதில்லை. யாரும் அவ்வாறு செய்ய விரும்புவதில்லை.

50 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரேல் தன்னை யாரும் தாக்க மாட்டார்கள் என்று நினைத்தது போல அமெரிக்காவும் அரபு நாடுகள் எண்ணெய் விநியோகத்தை நிறுத்தாது என்று நினைத்தது. ஆனால் இந்த இரண்டு விஷயங்களும் நடந்தன.

கத்தார் வெளியுறவு அமைச்சகத்தின் கூற்றுப்படி, இஸ்ரேல் விவகாரத்தில் அமெரிக்கா உலகளாவிய பங்கை வகிக்க வேண்டும் என்று அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் அடங்கிய குழு அமெரிக்காவிடம் தெரிவித்திருந்தது.

சவூதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான், வெள்ளிக்கிழமையன்று வாஷிங்டனில் பேசிய போது, “நாங்கள் பயன்படுத்தக்கூடிய செல்வாக்கை பயன்படுத்துவதைத் தவிர்ப்பதால் நாங்கள் தோல்வியடைந்துள்ளோம்,” என்றார்.

சர்வதேச சமூகம் தனது செல்வாக்கைப் பயன்படுத்துவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருந்தன. சர்வதேச அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு, உலகளாவிய நிறுவனங்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்துவது அவசியமாகிறது. போர் நிறுத்தம் என்பது ஒரு தோல்வியைத் தாங்கிய சொல்லாக மாறிய நிலையை நாம் பார்க்கிறோம். வெளிப்படையாகச் சொன்னால், நாங்கள் அதைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டோம்.

ஓமன் வெளியுறவு அமைச்சர் பதர் அல்புசைதி அமெரிக்காவின் வீட்டோ அதிகாரம் தற்போது பயன்படுத்தப்பட்டிருப்பது தொடர்பாக மிகவும் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தினார்.




“பாதுகாப்பு கவுன்சிலில் வீட்டோவைப் பயன்படுத்துவது மனித விழுமியங்களை அவமதிக்கும் செயல்” என்று ஓமன் வெளியுறவு அமைச்சர் தமது எக்ஸ் பக்கத்தில் ட்வீட் செய்துள்ளார். “யூதவாதத்துக்காக அப்பாவி குடிமக்கள் கொல்லப்படுவதை ஆதரிக்கும் அமெரிக்காவை நினைத்து நான் மிகவும் வருந்துகிறேன். இன்றைய இந்த வீட்டோ வரலாற்றில் அவமானமாக பார்க்கப்படும்.” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஓமன் நாட்டின் வெளியுறவு அமைச்சரின் இந்த எதிர்வினை குறித்து, ‘திங்க் டேங்க் குயின்சி இன்ஸ்டிட்யூட்டின்‘ துணைத் தலைவரான ட்ரிட்டா பார்சி தமது எக்ஸ் பதிவில், “ஐ.நா.வில் போர் நிறுத்தம் குறித்த தீர்மானம் வந்த போது, வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்திய அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கு எதிராக ஓமன் அமைச்சர் கடுமையான சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்,”என்று எழுதியுள்ளார். ஓமன் அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடாக இருந்து வருகிறது. பைடன் தனது நல்ல நண்பர்களைக் கூட இஸ்ரேலுக்காக ஒதுக்கி வைக்கிறார்.

எனினும், இஸ்லாமிய நாடுகள் இஸ்ரேல் மீது எவ்வளவு கோபம் காட்டினாலும், அவர்களால் அதிகமாக எதுவும் செய்ய முடியாது என்று பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

1973 அரபு-இஸ்ரேல் போரின் போது, அரபு நாடுகள் எண்ணெய் விநியோகத்தை நிறுத்தியிருந்த நிலை வேறுபட்டது.

அந்த காலகட்டத்தில் அரபு-இஸ்ரேல் போருக்குப் பிறகு விதிக்கப்பட்ட எண்ணெய்த் தடைக்குப் பிறகுதான் அமெரிக்கா எண்ணெய் விநியோகத்திற்கான மாற்று ஆதாரங்களைத் தேடத் தொடங்கியது.

இஸ்ரேலைப் பொறுத்தவரையில், ஹமாஸுடனான அதன் போர் தொடர்ந்தால், மற்ற அரபு நாடுகளும் அதனுடன் இணைந்தால், அதன் நிலைமை சிக்கலானதாக மாறலாம். ஏனெனில் தாக்குதலின் போது, இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் டேங்கர்கள் வரும் இஸ்ரேலின் துறைமுகங்கள் குறி வைக்கப்படும் ஆபத்து வலுவாக இருக்கிறது.

### வீட்டோவுக்குப் பிந்தைய அமெரிக்காவின் விமர்சனம்

பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்திய பின், அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கனை சந்தித்தனர்.

பிளிங்கனின் உதவியாளர்கள் காஸாவின் எதிர்காலத்தைப் பற்றி அவர் பேச விரும்புவதாகக் கூறினர். ஆனால் ஜோர்டான் வெளியுறவு அமைச்சர் எமான் சஃபாடி அவரது அணுகுமுறையை நிராகரித்தார்.

“இன்றைய மனிதாபிமான போர் நிறுத்தத்தை ஆதரிப்பதில் தோல்வி என்பது பாலத்தீனர்களைப் படுகொலை செய்வதை ஊக்குவிக்கிறது என்பதுடன் சர்வதேச சட்டங்களை மீறுவது மற்றும் போர்க்குற்றங்களைச் செய்வதற்கு சமம்” என்றார்.

அதேநேரத்தில், துருக்கியும் அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியதை கடுமையாக குறிவைத்துள்ளது. உலக மனித உரிமைகள் தின நிகழ்வில் அதிபர் ரெசெப் தயிப் எர்துவான், “மேற்கத்திய நாடுகளின் அசைக்க முடியாத ஆதரவைப் பெற்றுள்ள இஸ்ரேல், காஸாவில் படுகொலைகளை நடத்தி வருகிறது. இந்த நேரத்தில் உலகம் நியாயமாகச் செயல்படவேண்டும். ஆனால் அமெரிக்காவால் எதுவும் நடக்காது. ஏனெனில் அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவாகச் செயல்படுகிறது,” என்று தெரிவித்தார்.

மேலும், அப்போது ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை எர்துவான் வலியுறுத்தினார்.

துருக்கி மேற்கத்திய நாடுகளின் ராணுவ ஒத்துழைப்பு அமைப்பான நேட்டோவில் உறுப்பினராக உள்ளது. ஆனால் மற்ற உறுப்பினர்களைப் போல, அது ஹமாஸை ஒரு தீவிரவாத குழுவாக கருதவில்லை.

ஈரானின் வெளியுறவு அமைச்சர் ஹுசைன் அமீர் அப்துல்லாஹியான், அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்திய பிறகு மத்திய கிழக்கில் நிலைமை மோசமாகும் அபாயம் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

“யூதவாத ஆட்சியின் (இஸ்ரேல்) குற்றங்கள் மற்றும் போர்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் வரை, இப்பிராந்தியத்தில் கட்டுப்படுத்த முடியாத ஒரு போர்ச்சூழல் வெடிக்கும் நிலை ஏற்படும் அபாயம் உள்ளது,” என்று ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரஸுடனான தொலைபேசி அழைப்பின் போது கூறினார்.

மலேசியாவின் தற்போதைய மற்றும் முன்னாள் பிரதமர்கள் இருவரும் அமெரிக்கா தற்போது வீட்டோவைப் பயன்படுத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

### ரஷ்யா - அரபு நாடுகள் இடையே அதிகரிக்கும் நெருக்கம்

கடந்த வாரம்தான் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்கு அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொண்டார்.

இந்தப் பயணத்தின் மறுநாளே மாஸ்கோவில் ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசியை புதின் சந்தித்தார். இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போரினால் அரபு நாடுகளை அமெரிக்கா குறிவைத்து இருக்கும் நிலையிலேயே புடின் இந்த சந்திப்பை மேற்கொண்டுள்ளார்.

யுக்ரேன் போர் தொடங்கிய பிறகு, விளாடிமிர் புடின் சில நாடுகளுக்கு மட்டுமே சென்றுள்ளார். இதில் அரபு நாடுகளுடன் ரஷ்யாவின் நெருக்கம் அதிகரித்துள்ளது தெளிவாகத் தெரிகிறது.

சவூதி அரேபியா மற்றும் ரஷ்யா ஆகிய இரண்டு நாடுகளும் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் குழுவான ஒபெக் இல் உறுப்பினர்களாக உள்ளன. மேலும் இது தொடர்பான எந்த முக்கிய முடிவுகளிலும் அவற்றின் செல்வாக்கு முக்கிய இடம்பெறுகிறது. கடந்த சில ஆண்டுகளாக இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையேயான உறவுகள் வலுவடைந்து வருவதாகத் தெரிகிறது.

சவூதி அரேபியாவுக்கு வந்த போது, பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் தனக்கு அழைப்பு விடுத்ததற்கு புதின் நன்றி தெரிவித்தார். முன்னதாக முகமது பின் சல்மான் ரஷ்யாவுக்கு வரப் போகிறார் என்றும் ஆனால் பயணத் திட்டங்களில் சில மாற்றம் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இருப்பினும், அடுத்த கூட்டம் மாஸ்கோவில் நடைபெறும் என்பது தெளிவாகியுள்ளது.

யுக்ரேன் ஆக்கிரமிப்பிற்குப் பிறகு மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ளும் ரஷ்யாவுடன் சவூதி அரேபியாவின் உறவுகள் வளர்ந்து வருகின்றன. இதனால், அமெரிக்காவைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, மத்திய கிழக்கு நாடுகள் தங்கள் சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையை நோக்கி நகரும் விதத்தையும் காட்டுகிறது.

ரஷ்ய அதிபர் புடினின் அறிக்கையிலும் இது பிரதிபலிக்கிறது. “எங்கள் நட்பு உறவுகள் முன்னேறுவதை எதுவும் தடுக்க முடியாது,” என்று பட்டத்து இளவரசரிடம் அவர் கூறினார்.

மறுபுறம், பல ஆண்டுகளாக சவூதி அரேபியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளில் பல ஏற்ற தாழ்வுகள் உள்ளன. இருப்பினும் அது அமெரிக்க ஆயுதங்களை அதிகம் வாங்கும் நாடாகவே திகழ்கிறது. ஆனால், இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போருக்குப் பிறகு, அமெரிக்காவுடனான சவூதி அரேபியாவின் மேம்பட்ட உறவுகள் ஸ்தம்பித்துள்ளன.

அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்திய பிறகு, சவூதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் காஸாவில் போரை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கூறினார். ஆனால் உலகின் பல நாடுகளின் அரசாங்கங்கள் அதை தங்கள் முன்னுரிமையாக கருதவில்லை என்று தெரிகிறது. ●